
# உரிமை முழக்கம்




கௌரவ ஆசிரியர்: பூண்டி திரு வீ. அப்பாசாமிவாண்டையார் B.A.





# பாராட்டும்-வாழ்த்தும்.

முயற்சியின் திருவினையால் உரிமை முழக்கத்தின் முதல் வெளியீடு வந்ததைக் கண்டு மகிழ்ந்தோம். எந்தநோக்கத்தோடு உரிமை முழக்கம் தோன்றிற்றோ அதற்குப் பெரிதும் நிலைநின்று, தொடர்ந்து நிலவி, சமுதாய முற்போக்கிற்குத்துணை செய்யுமென நம்பி, அதற்கு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஒப்பம். அ. விசுவநாதத்தேவர்,
உக்கடை.

ஆசிரியர் உரிமை முழக்கம்,

ஐயா, உரிமை முழக்கம் கிடைத்தது. பார்த்தேன். தமிழர்களின் உரிமைகோரி முழக்கமிடவந்திருக்கும் தமிழர்களின் ஒன்றுபட்ட ஓசையாகத் திகழ்கிறது.

தமிழகத்துக்காகவும் தமிழ்நாட்டுக்காகவும் உயிர்த்தியாகம்செய்த வீரத்தியாகி சங்கரலிங்கநாடாரின் கோரிக்கை நிறைவேற்ற தமிழ் மக்களும்—உரிமை முழக்கமும் ஒன்றுபட்டு இயங்க வேண்டுகிறேன். வாழ்க தமிழர்! வளர்க உரிமை முழக்கம்!

ஒப்பம். ஐயாறு வாண்டையார்,
பூண்டி.

ஆசிரியர் உரிமை முழக்கம்,

தாங்கள் ஆரம்பித்த "உரிமை முழக்கத்தைப்" படித்தேன், பொலிவுற்று விளங்குகின்றது, மேலும் மேலும் வளர எனது மனமார்ந்த நன்றிகள்.

ஒப்பம். A. வீரையா வாண்டையார்,
பூண்டி.

"உரிமை முழக்கம்" என்ற தங்கள் வெளியீடு மங்களம் முழங்கி வெளியாவது கண்டு மாற்றவொண்ணு மகிழ்ச்சியும் குன்றாத பூரிப்பும் கொள்கின்றேன். இத்தகு புகழிதழுக்கு முற்போக்குவாதியும், முன்னேற்றக் கருத்தும்கொண்ட திரு அப்பாசாமி வாண்டையார் B. A., அவர்கள் இப்புனித சேவையில் பொறுப்பேற்று நடத்துவது பிற்பட்டோரின் உள்ளத்திலே புத்துணர்ச்சியளிக்கிறது. உங்களின் உரிமை முழக்கம் மக்களின் உரிமையைக் காக்கும் பணியில் ஈடுபட வேண்டும். உள்ள உரிமை பறிபோகும் நிலைமை ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும், பிற்பட்ட மக்களின் முன்னேற்றத் துறையில் பெரும்புரட்சி எழவேண்டும். அப்புரட்சியில் அன்பும் அமைதியும் அருள்புரியும் அளவிற்கு இருத்தல் வேண்டும், உரிமைக்காகப் போரிடுமிடத்து ஓடிவரும் இன்னல் இடையூறுகளுக்கு அஞ்சாது அயராது உழைக்கும் ஆற்றல் வேண்டும். உரிமை முழக்கம் என்ற பெயரிலே உருவாகி வெளிவரும் இந்தத் திங்கள் இதழுக்கு திரு. பி. வீரபத்திரன் அவர்கள் போன்றோரின் சீரிய கருத்துக் கட்டுரைகள் இடம்பெறவேண்டும். இவ்விதழ் தமிழகத்தில் நலமிடும் நல்லேடுகளில் முதலேடாகத் திகழவேண்டும். முழங்கட்டும் உங்கள் உரிமை, தழைக்கட்டும் உங்கள் எண்ணம்.

ஒப்பம். பி. தனுக்கோடித்தேவர்.
கல்லடிப்பட்டி.

"நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமெனக்கூறும் ஒருசில ஏடுகளின் முன் வரிசையில் நிற்கிறது உரிமை முழக்கம்.

தற்கால நாகரீகத்திற்கேற்ப தங்கள் நூலில் சாதி, சமய வேறுபாடுகளை நீக்கி கவிதை, கட்டுரைகள் அமைத்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. எடுத்த எடுப்பிலேயே மொழிப்பற்று, நாட்டுப்பற்று கமழ வாசகர்களின் உள்ளத்தை தேன் உண்ணும் வண்டாக மாற்றுகிறது. "கனவு உலகில்" என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கதே.

இலக்கியச் செல்வம் உலகியல் செய்திகள் இடம் பெறுதல் நலம். உரிமை முழக்கம் கதிரவன் போன்று ஓங்கி வாழியவே! ஓங்குக அதன் பெருமை நற்றமிழ் நாடெங்கும்!

ஒப்பம். தெ. வேலாண்டி B. A.,

திருமங்கலம்.

ஐயா,

"உரிமை முழக்கம்" என்ற பத்திரிகை தமிழகத்திலே உறங்கிக்கிடக்கும் மக்களை உரிமையோடு உற்சாகப்படுத்தும்என்று நம்புகிறோம். பத்திரிகை வளர்ச்சியடைய கட்சிச்சார்பற்ற செய்திகள் கணிசமான அளவு பக்கம் பக்கமாக கருத்துடன் இடம்பெற வேண்டும். பாமர மக்களும் பார்த்து பரவசம் அடையும் வண்ணம் பல பொதுமக்களின் மனதைக் கவரும் விதமாக பெயருக்கு ஏற்ப உரிமை இழந்த மக்களுக்கு தக்க தருணத்தில் உரிமைக்குரல் கொடுத்து உரிமை முழக்கம் முழங்க வேண்டும்.

இதன் ஆசிரியர் உயர்திரு வீரபத்திரன் அவர்கள் எல்லா வழியிலும் இடையராது உழைத்து உரிமை முழக்கம்பத்திரிகையை உயர்வுக்குக்கொண்டுவரவேண்டும்என்றுகேட்டுக் கொள்கிறேன்.

ஒப்பம். எம். பி. இராமச்சந்திரன்,

சிரமேல்குடி.

உரிமை முழக்கம் பத்திரிகை கிடைத்தது, படித்துப் பார்த்தேன். தமிழகத்தின் வருங்கால வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டிய நிர்மாண திட்டங்களும், புதிய தமிழகத்தை தட்டியெழுப்பும் வீரமிக்க பாடல்களும் மலிந்து இருக்கிறது. நமது தெற்கெல்லை மீட்சியில் அரும்பாடுபட்ட வீரர் திரு. P.வீரபத்திரன் அவர்களை ஆசிரியராகக்கொண்டிருப்பதுபார்த்து மகிழ்ச்சி. தமிழ் மக்கள் அவரின் நன் முயற்சி வெற்றிபெற பத்திரிகை வளர்ச்சியுற ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

ஒப்பம். வீ. கே. குப்புசாமி,

மேலூர்.

எழுத்தறிவு—பகுத்தறிவு—இணையிலாத் தமிழறிவு எல்லாம் பெற்ற—மேலைநாட்டு மொழியிலும் பயின்று மேன்மையுற்ற உரிமைத் தமிழர்களின் வாழ்விலே கருத்து மிகக் கொண்ட நல்லெண்ணச் சிற்பி அப்பாசாமி வாண்டையார் அவர்களின் தக்க ஆதரவோடு தாங்கள் தாயகத்திலே முழங்கியுள்ள முதல் முழக்கம் ஏடு கிடைத்தது—நன்றி.

"பிற்பட்டோர் முன்னேற்ற இதழ்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிற்பட்டோராகக் கருதியவரைக் களைந்தெறியும் உரிமை முழக்க ஏடு என்றிருந்தால் எனது மகிழ்ச்சிக்கு அளவிராது. இது என்து கருத்து.

ஏட்டினுள் புகுந்தேன். எழுச்சியும், புரட்சியும், ஏற்றம் பெறும் வாய்ப்புக்கு ஆசி நல்கும் வாழ்த்துக்களும் என்னைக் கவர்ந்தது—கருத்துக்கள் இன முழக்கம் [தமிழினம்) ஆர்த்தது. முகப்பிலே குமரியின் ஓவியங்கள் [புகைப்பட ஓவியங்கள்] பண்டு நமது நாயக வீர வரலாற்றை எதிரொலிக்கச்செய்கின்றன.

தமிழக மக்கள் அனைவரது மூச்சும் தாயகம்—குறிக்கோள் உரிமை—இரண்டும் பிரிக்க முடியாதவை. இரண்டும் இணைந்த செயலாக்கமே தமிழனின் நாகரீகம்—பண்பு—கலாச்சாரம். இதனை மறைக்க—மறுக்க எவரேனும் துணியார்.

இந்த ஒரு நல்ல சூழ்நிலையோடு தங்களின் முயற்சி வெல்க என வாழ்த்துகிறேன்.

ஒப்பம். நல்லுலகசுந்தரம்,
ஆசிரியர்: "தாயகம்"

நாஞ்சில் பி. வீரபத்திரன் அவர்களுக்கு,

தங்களை ஆசிரியராகக்கொண்ட "உரிமை முழக்கத்தின்" முதல் முழக்கம் கிடைக்கப் பெற்றேன். அதில் காணப்பட்ட கட்டுரைகளும், கதைகளும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. "கனவுலகில்" என்ற கட்டுரை என்றும் சிந்தையில் நிற்கும்.

"தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாகிவிட்டால் பத்திரிகைத்துறையிலும் தமிழ் முதல் இடம் பெற்றுவிடும்" என்று கூறினர் பேராசிரியர் மு. வ. அதற்கேற்ப தமிழ் ஆட்சிமொழியான அமயத்தில் வெளிவரும் தங்கள் பத்திரிகை தமிழர்களின் உரிமைகளை விளக்கி அவைகளை முழங்கச்செய்து பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

ஒப்பம் வே. சிவன்பிள்ளை B. A., L. T.,
தலைமை ஆசிரியர், தக்கலை.

தங்கள் பத்திரிகையின் முதல் இதழ் கிடைக்கப்பெற்றேன். முயற்சி போற்றுதற் குரியது. "உரிமை முழக்கம்" விரைவில் தஞ்சைமாவட்ட மக்கள் நெஞ்சில் இடம்பெறுவதாகுக!

ஒப்பம். ஜி. சுவாமிநாதன்,
தஞ்சை.

திரு. அப்பாசாமி வாண்டையார் அவர்களை கௌரவ ஆசிரியராகக்கொண்டு தங்களால் வெளியிடப்படும் "உரிமை முழக்கம்" பத்திரிகையின் முதல் இதழ் கிடைக்கப்பெற்றேன்.

இந்நாட்டிலுள்ள பல்வேறு துறைகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து வீர முழக்கம் செய்ய வேண்டுகிறேன்.

ஒப்பம். து. சாம்பசிவத்தேவர்
ஆசிரியர் "முக்குலமணி" ஜுடிஷியல் ஸ்பெஷல் டவுன் மாஜிஸ்டிரேட், திருச்சி.

அன்று தென் எல்லைப்போராட்டங்களில் தங்கள் வீர முழக்கம் கேட்டோம். மகிழ்ச்சி யுற்றோம். வெற்றியும் கண்டோம். நன்றி.

இன்று தமிழகத்தின் நீதி, மொழி, கலை, வணிகம், சமூகம், இவைகளின் முன்னேற்றத்துக்கு என்று "உரிமை முழக்கம்" திரு. அப்பாசாமி வாண்டையார் அவர்களின் ஒத்துழைப்பால் வெளிவந்திருக்கும் திங்கள்இதழைப் பார்த்தேன், பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன். வாழ்க தமிழகம். வளர்க தமிழர்களின்"உரிமை முழக்கம்."

ஒப்பம்: க. துளசிராமன்,
திருச்சி.

---

## அட்டைப்படம்:

காந்தியடிகளாரின் நினைவு மண்டபம், கன்னியாகுமரி.
புகைப்படம் உதவியவர்: பூண்டி உயர்திரு கி. அய்யாருவாண்டையார் அவர்கள்.

பிற்பட்டோர்
முன்னேற்ற இதழ்.

# உரிமை முழக்கம்

ஆண்டு சந்தா
மலருடன் ரூ. 4.
தனி இதழ் அணா. 4.

முரசு 1 | 1—2—57 | முழக்கம் 2

# தேர்தல் களத்திலே நாம்......

நம்நாடு சுதந்திரம் பெற்றபின் நடக்கின்ற இரண்டாவதுதேர்தல். சென்ற தேர்தலை விட மக்கள் விழிப்பும் பொறுப்புணர்ச்சியும் சிறிது அதிகமாகப் பெற்றிருக்கின்றனர் என நாம் கருதுகிறோம்-

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை உள்நாட்டுக் கொள்கைகளின் இலாப நட்டங்களையும் முன்னேற்றத்தன்மைகளையும் பிற்பட்ட தன்மைகளையும் மக்கள் முன்பாக வைத்து ஆளும் கட்சியினரும், ஆளவரவேண்டுமென்று நினைக்கின்ற கட்சியினரும், தங்கள் தங்கள் பிரச்சாரபலத்தால் தேர்தல் களத்தில் குதித்துக்கொண்டிருக்கின்றனர்.

உலக சமாதானத்திற்கு இந்தியா செய்தசேவை, அடிமைப்பிடியில் தவிக்கும்காலனி ஆதிக்கத்தின் காலடியில் கிடந்து நசுங்கும் மக்களுக்கு விடுதலையளிக்க வேண்டுமென்ற கொள்கை, வல்லரசுகளின் ராணுவ கூட்டமைப்பில் சேராமல் நடுநிலைக்கொள்கைகளைக் கடைபிடித்தல், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தை நிறைவேற்றல், காமன்வெல்த்தில் ஒண்டி உறவாடல், பாகிஸ்தானின் போர்முழக்கம் போன்ற சூழ்நிலைகளின் நடுவே நமது நாட்டின் தேர்தல் நடக்கப் போகின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடியர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து தனிநாடு அமைத்துக்கொண்டு ஆட்சி புரிகின்ற நிலையிலும் நியாயமாகத் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய தமிழ்ப்பகுதிகள் காலந்தாழ்த்திக்கொண்டே வருகின்ற நிலையிலுந்தான் நாமும் தேர்தலை எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் விடுதலைக்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்த தியாகிகளின் வறுமைத் தகராறு, பகல் முழுவதும் அலுவலகங்களிலே அடைபட்டு வேலை செய்கின்ற என். ஜி. ஓக்களும்; அலுவலக கடைநிலை ஊழியர்களும் தங்களது வாழ்க்கைப் பிரச்சனைகளையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றனர் இத்தேர்தல் சமயத்தில். நில உடைமையாளர்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நல்லுறவற்ற தன்மையில் தேர்தல் வருகின்றது.

மேலும் சென்னை ராச்சியம் சட்டப்படி தமிழகம் என திகழவும், தமிழ்மொழி நம் நாட்டின் சகலதுறைகளிலும் ஆட்சி செலுத்தவும், எல்லைகள் மீட்கப்படவும் செய்யச் செய்வதும் ஆட்சிப்பொறுப்பில் அமர வரவிருப்பவர்களின் கவனத்திற்கு நாம் கொண்டு வரவேண்டும். கனரகத்தொழில் முன்னேற்றத்தில் தமிழகம் முன்னேறவில்லை. படித்துப் பட்டம் பெற்ற மத்தியதர வகுப்பினரிடையேயும் வேலையில்லாத்திண்டாட்டம் மலிந்து

காணப்படுகின்றன.

பிற்பட்டமக்களை முன்னேற்ற இரண்டாண்டுகளுக்குமுன் நாடுபூராவும்சென்றுகண்டறிந்தவற்றை அடிப்படையாகக்கொண்டு தயாரித்த அறிக்கையும் இன்னும் வெளிவரவில்லை. பிற்பட்ட மக்களின் நிலையையும் அரசாங்கமும் தெளிவாகவிளக்கவில்லை. மேலே கூறியவைகளை நாம் கவனத்தில்கொண்டு நமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் மலைபோல் குவிந்துகிடக்கின்றன. அவைகளை இராச்சியஅரசாங்கங்களுக்குப்பங்கிட்டுக்கொடுத்தால்தான் சுயாட்சிஉறுப்பு பெற்றஇராச்சியங்களாக ஒவ்வொரு மொழிவழியிலுதித்த இராச்சியங்களும் அமையமுடியும். அப்படி அமைந்தால்தான் ஒரே இந்தியா என்ற நிலைமாறி பலமுள்ள ஐக்கிய இந்தியாவாக மலரமுடியும். பிரிவினை சக்திகளும் ஒழியும். நாடு நலமுடன் வாழவும் நல்லாட்சி ஏற்படவும் வழியுண்டு

எனவே வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாக்குகளை வழங்கும்போது மேலே கூறியவற்றையும் சிறிது சிந்தனை செய்து தங்களது வாக்குகளை நல்க வேண்டுகிறோம்.

## வாழ்த்துகிறோம்.

மொழிவழி அடிப்படையில் மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, தமிழர்கள் வாழும் தமிழ் நிலத்திற்கு சென்னை ராஜ்ஜியம் என்ற பெயரை வைத்துக்கொண்டிருப்பது இழிசெயல் எனக்கருதி திரு. சங்கு கணேசன் அவர்கள் பதினெட்டு நாட்களுக்கு மேலாக உண்ணாநோன்பு இருந்து வந்தார்கள். இதே அடிப்படையில் முன்பு விருதுநகர் தியாகி சங்கரலிங்கநாடார் அவர்கள் 77 நாட்களுக்கு மேலாக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்தார்.

விடுதலைப்போராட்ட காலத்தில் காலணாவுக்கு "சுதந்திரச்சங்கு" என்ற பத்திரிகையின் மூலமாக தமிழர்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டிய திரு. சங்குகணேசனையும், சங்கரலிங்கனாரைப்போல இழந்துவிடக்கூடாதெனக்கருதித்தமிழகத் தலைவர்களும், எதிர்காலத் தலைவர்களான மாணவர்களும் வேண்டிக்கொண்டதற்கிணங்க நிறுத்தியிருக்கிறார். அவரின் தியாகசிந்தையைவாழ்த்துகிறோம்,

ஆனால், அவரின் கோரிக்கையை நாம் மறந்துவிடக்கூடாது. மீண்டும் ஆட்சியாளரின் கவனத்திற்குக்கொண்டுவருவது தமிழ்மக்களின் பொறுப்பு. வாழ்கசங்குகணேசன்!

★

மணம் குணம் நிறைந்த
எவரெஸ்ட்காப்பிபவுடர்
எங்கும் கிடைக்கும்
எவரெஸ்ட் காப்பி வர்க்ஸ்,
கரந்தை தஞ்சை.

குறித்த காலத்தில், சிறந்த முறையில்,
நாகரீக உடைகள் தைத்துத்தருமிடம்
S. R. ராஜன்
டெய்லரிங்ஹவுஸ்,
கடைத்தெரு,
கரந்தை, தஞ்சை.

# ★ மருத்துவம். ★

## சளி பிடித்திருக்கும்பொழுது காது மந்தமாக இருப்பது ஏன்?

பி. பத்மநாபச்சாரி A. M. I. H., M. D..H., M. Sc., Homoco

சப்தமானது ஒலி அலைகளாக மாற்றப் பட்டு புறச்செவியின் (External ear) மூலமாகச் செவிக்குழலை (Auditory Canal) அடைகிறது. அங்கு அவைகள் செவிப்பறையில் (Ear Drum-or tympanni) அதிர்வுகளை ஏற்படுத்தும். செவிப்பறை அதிர்வடையும் பொழுது அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் செவிச் சிற்றெலும்புகள் (Auditory Bones) அதிர்வடையும். செவிச்சிற்றெலும்புகள் அதிர்வடையும் பொழுது உட்செவியிலுள்ள நிண நீரில் (Endo lymph) அலைவுகளைஏற்படுத்தும். அந்த அலைவுகள் செவி நரம்புகளின் பிரிவைத் தூண்டுகின்றன. பிறகு அவ்வுணர்ச்சியானது மூளைக்கு எடுத்துச்செல்லப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகள் நிகழும்பொழுது உட்செவியின் வாயு அமுக்கமும் (Atmospheric Pressure) வெளிக்காற்றின் அமுக்கமும் ஒன்றாகவே நிலைத்திருக்கவேண்டும்.

சளியினால் பாதிக்கப்பட்டிருக்கும்பொழுது நாசிகளில் சளி அடைத்துக்கொள்ளும். அப்பொழுது சரியாக சுவாசிக்க முடியாது. ஆகையால் தொண்டைக் குழாயிற்கும், நடுச் செவிக்குழலுக்கும் மத்தியிலுள்ள காற்றின் அமுக்கம் வெளிக் காற்றின் அழுத்தத்தை விட மிகக் குறைந்துவிடும். வெளிக் காற்று செவிப்பறையைஉள்நோக்கித்தள்ளும். ஆகையால்தான் சளியினால் பாதிக்கப்பட்ட ஒருவன் மிகஇலேசானசப்தத்தை உணரமுடிவதில்லை. இந்தக் காரணத்தால்தான் சளிபிடித்தவர்களின் காது மந்தமாக இருக்கிறது.

# உரிமை முழக்கம்!

சீராளன்

வாழ்க நற்றமிழ் வையத்து நீடென
வாழ்த்துவோம்—முடி—தாழ்த்துவோம்
சூழ்க எங்கணும் சுத்தநல் வாழ்வெனச்
சொல்லுவோம்—கெடி—கொள்ளுவோம்.
சங்கம் முழங்கிடு துங்கக் குலக்கொடி
தொங்கவோ—ஒளி—மங்கவோ
சிங்கங்கள் போலிளங் காளைகாள் சேருங்கள்
சேவைக்கே—வழி—மேன்மைக்கே.
பொன்னும் மணியும் பொலிந்திட்ட நாடின்று
புளுங்கவோ—திறல்—மழுங்கவோ
எண்ணும்போ துள்ளமே ஏங்கிட நாமென்ன
ஏழையோ—வெறும்—கோழையோ?
கல்லுங் கரடும் செறிந்திட்ட மண்ணுமேர்
தட்டுவோம்—பயன்—கிட்டுவோம்
அல்பகல் அயராத உழைப்பிலே செல்வங்கள்
அள்ளுவோம்—பயம்—தள்ளுவோம்.

சீறம் வாய்ந்திட்ட சீரிய முயற்சிகள்
சிந்திப்போம்—ஒன்று—சந்திப்போம்
பேரறி வாளர்கள் பெருக்கிடும் நல்லுரை
பேசுவோம்—அல்ல—தேசுவோம்.
வீட்டறம் விளங்கிட நாட்டறம் துலங்கிடும்
வீரர்காள்—இளஞ்—சூரர்காள்
போட்டி பொருமை பொய்யினம் ஆயின
புடையுங்கள்—நலம்—படையுங்கள்.
அருந்திரு எழுந்தது அகிலத் தெனமுர
சடியுங்கள்—சின்னம்—பிடியுங்கள்
பேரருட் கருணை நல்லர சாட்சி
பிறக்கவே—நீடு—சிறக்கவே.
புத்தப் புதுநெறிப் புதுமைத் தமிழகம்
புதுக்குவோம்—புகழ்—செதுக்குவோம்
சுத்த சமரச சன்மார்க்க சங்கங்கள்
சூழ்கவே—உலகு—வாழ்கவே!

# ★ சூயஸ் கால்வாய் பிரச்சனை ★

**A. கணேசன். M.A., விரிவுரையாளர்,**
**ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.**

சென்ற சில மாதங்களாக இருந்துவரும் சூயஸ்கால்வாய் பிரச்சனை உலகஅமைதியை பெரிதும் பாதித்து இருக்கிறது. பிரிட்டன், பிரஞ்சு ஆதிக்கத்தில் இருந்து வந்த சூயஸ் கால்வாயை எகிப்து திடீரென்று தேசீய மயமாக்கியது. இதைத்தவிர்க்கக்கையாண்ட சில உபாயங்கள் பலனளிக்காமல் போக, கால்வாயை மீட்க இருநாடுகளும் தங்கள் படைகளை அனுப்பி எகிப்தை கடுமையாகத்தாக்கின. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் முயற்சியால் ஐ. நா. ஸ்தாபனம் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தியிராவிட்டால் இது 3-ம்உலக யுத்தத்திற்குஅடிகோலி இருக்கும்.

எகிப்து பழமை மிக்கநாடு. அதன் நைல் நதிச்சமவெளிப் பிரதேசத்தில்தான் சுமார் 7000ஆண்டுகளுக்கு முன் உலகின் முதல் நாகரீக மக்கள் தோன்றியதாக சரித்திரம் கூறுகிறது. பூமியினின்றும் இன்றும் தோண்டியெடுக்கப்படும் ஞாபகச்சின்னங்களும், பட எழுத்துக்களும், கம்பீரமாக தோற்றமளிக்கும் பிரமிட்டுகளும், ஸ்பிங்ஸ்களும் அதன் பழம்பெருமையின் எடுத்துக்காட்டுகள்.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் சீரும் சிறப்புடனும் வாழ்ந்தநாடு சென்ற சில நூற்றாண்டுகளாக அன்னிய ஆதிக்கத்திற்குட்பட்டு நலிவுற்றது. சில ஆண்டுகள் அராபியருக்கு அடிமைப்பட்டிருந்தது. கி. பி. 16-ம் நூற்றாண்டில் அது துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒருபகுதியாக மாறியது. 19-ம் நூற்றாண்டில் முகம்மது அலி என்னும் துருக்கிய கவர்னர் எகிப்தை ஆண்டார். அவரின் கீழ் அது கிட்டத்தட்ட சுதந்திர நாடாகவே இருந்தது. முகம்மதுஅலிதிறமையுள்ளவர், அவருக்குப்பின் வந்தவர்கள் பலமற்றவர்கள்.

19-ம் நூற்றாண்டில் ஐரோப்பியநாடுகள் ஆப்பிரிக்காவை ஆக்ரமித்து அதை பங்கு போட்டுக்கொண்டன. எகிப்தின்மேல் பிரிட்டன் பாய்ந்தது. இந்தியா செல்லும் மார்க்கத்தில் எகிப்திருந்ததே இதற்குக்காரணம். எகிப்தில் இங்கிலாந்தின் செல்வாக்கும் ஆதிக்கமும் ஏற்பட்டது.

ஆதிகாலம் தொட்டு ஐரோப்பிய ஆசிய நாடுகளிடையே பாலைவனங்களின் வழியாக ஒட்டகங்களின் மூலம் வியாபாரம் நடந்து வந்தது. வாஸ்கோடிகாமா கண்டுபிடித்ததன் பிறகுதான் ஆப்பிரிக்காவைக் சுற்றிக் கொண்டு சமுத்திரமார்க்கமாக வியாபாரம் நடந்தது.

1869-ம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டதும் ஐரோப்பிய ஆசிய வியாபாரத்திலும் அரசியலிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன.

இதே கேந்திர ஸ்தானத்தில் கால்வாய் வெட்ட எத்தனையோ முயற்சிகளும் திட்டங்களும் இருந்திருக்கின்றன. கி. மு. 1400 ஆண்டுகளுக்கு முன்கூட ஒருகால்வாய் இருந்ததாகவும் பின்னால் தூர்க்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

1798-ல் எகிப்துவரை படையெடுத்து வந்த நெப்போலியன் இதைச்செய்ய கனவு கண்டார். ஆனால் அது சாத்தியப்படவில்லை. பெர்டினண்ட் டி. லெஸ்ஸப்ஸ் என்னும் பிரெஞ்சு நிபுணர் எகிப்தின் அனுமதியுடன் அதை வெட்டி முடித்தார். 1859-ல் வேலை ஆரம்பிக்கப்பட்டு 1869-ம் ஆண்டில் 2கோடி பவுன் செலவில் கட்டிமுடித்தார். துருக்கி, இங்கிலாந்து போன்ற நாடுகள் இதை எதிர்த்தும் இந்த நல்ல காரியம் வெற்றியாக முடிந்தது. சூயஸ்கால்வாய் மத்தியதரைக்கடலை

யும் செங்கடலையும் 4பெரிய ஏரிகளின் வழி யாக இணைக்கிறது.

சூயஸ் கால்வாய் கம்பெனி ஆரம்பித்த பொழுது எகிப்திற்குப் பெரும் பகுதியான பங்குகள் சொந்தமாயிருந்தன. எகிப்திய கவர்னர்கள் ஒரு சிலரின் ஆடம்பரத்தினால் அவர்கள் பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளிகளிடம் வெகுவாக கடன்பட்டனர். அதைத்தீர்க்க கால்வாயில் தங்கள் பங்குகளை விற்கமுன் வந்தனர். இதை பெஞ்சமின் டிஸ்ராலி என்னும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரகசியமாக வாங்கிவிட்டார். அதற்குப் பிறகு கால்வாய் கிட்டத்தட்ட பிரிட்டனிடமே இருந்துவந்தது. கால்வாயின் நிர்வாகம் பெரும்பாலும் பிரெஞ்சுக்காரரிடமிருந்தது. பாரீஸிலும், அலெக்ஸாண்டிரியாவிலும் கம்பெனியின் காரியாலயங்கள் உள்ளன. 1888-ம் ஆண்டின் ஒப்பந்தத்தின் பிரகாரம் கால்வாய் எகிப்துநாட்டின் எல்லையில் இருப்பதால் அதன் ஏகபோக உரிமை ஒத்துக்கொள்ளப்பட்டது. வருமானத்தில் பெரும்பகுதி பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமே சென்றது. எல்லா நாடுகளுக்கும் கப்பல் போக்குவரத்துக்கு சம உரிமை அளிக்கப்பட்டது.

தற்கால எகிப்திய அரசியலில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. 1952-ம்வருஷப் புரட்சிக்குப்பின் முடியாட்சி நீங்கி குடியாட்சி நிலவியுள்ளது. எகிப்து பூர்ண சுதந்திர நாடாகமாறிவிட்டது. பிரிட்டனின் செல்வாக்கும், ஆதிக்கமும் நீங்கியது.

நாஸர் அதிபதியானதும் வெளிவிவகாரக்கொள்கையில் எந்தவல்லரசையும் சாராத நடுநிலைமைக் கொள்கையை அனுசரிக்கலானார். ரஷ்யா, ஸெகோஸ்லாவாகியா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளுடன் நேசஉறவை வளர்த்து, வியாபார தொடர்பை ஏற்படுத்தினார். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் சேர்ந்து உலக சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்கலானார்.

உலக சமாதானத்திற்கு இன்று முட்டுக்கட்டையாயிருப்பது அமெரிக்க, ரஷ்ய வல்லரசுகளின் போக்கு. இவற்றின் விரோதத்தால் உலக நாடுகளில் பல இருபிரிவாகப் பிரிந்துள்ளன. இதனால் உலகப்பிரச்சனைகளைத் தீர்ப்பது மிகவும் சிரமமாய் இருக்கிறது.

முன்பு பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்த பாலஸ்தீனின் ஒருபகுதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உதவியால் இஸ்ரேல் என்னும் யூதநாடு தோன்றியது. இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்கும் அதையடுத்து பல தகராறுகள் ஏற்பட்டுள்ளன. அரபுநாடுகள் சார்பில் எகிப்து இஸ்ரேலுடன் பல சச்சரவுகளில் ஈடுபட்டிருக்கிறது.

அடைந்த சுதந்திரத்தை பலப்படுத்த எகிப்தின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய முயற்சிகள் செய்யப்பட்டன. ரஷ்யா, ஸெகோஸ்லாவாகியா போன்ற நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொண்டு அபிரிமிதமாக விளையும் பருத்தி போன்ற பொருள்களை அனுப்பி அந்த நாடுகளிடமிருந்து தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய யந்திரங்களைப் பெற்றது. படை பலத்தைப் பெருக்க யுத்த தளவாடங்களை அமெரிக்காவிடமும் பிரிட்டனிடமும் கோரினர். இஸ்ரேல் இந்தநாடுகளின் உதவியால் யுத்த தளவாடங்களைப் பெற்றிருந்தது. இஸ்ரேல், அரபுநாடுகள் தகராறை உத்தேசித்து எகிப்துக்கு பிரிட்டனும், அமெரிக்காவும் ஆயுத உதவியளிக்க மறுத்துவிட்டன. ஆகவே எகிப்து ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றது.

நீர்ப்பாசன வசதியையும், மின்சார வசதியையும் அதிகரிக்க நைல் நதியின் குறுக்கே அஸ்வான் அணை என்ற பெரும் அணைகட்ட திட்டமிட்டனர். அதற்கு வேண்டிய கடன் வசதியளிக்க பிரிட்டன், அமெரிக்காபோன்ற நாடுகளும், உலகபாங்கும் முன் வந்தன. இருந்தும், தருணத்தில் கடன் கொடுப்பதை அவை மறுத்தன. அதற்கு ஒருசிலகாரணங்களை சாக்காகச் சொன்னார்கள். ஆனால்

உண்மைக் காரணம் சர்வதேச அரசியலில் எகிப்தின் போக்கு இந்நாடுகளுக்கு பிடிக்காததே. ரஷ்யாவுடனும் அதைச்சார்ந்த நாடுகளுடனும்அரசியல், வியாபாரத்தொடர்பு வைத்துக் கொண்டதும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் சேர்ந்து அவைகளின் கொள்கையைப் பின்பற்றியதும், அரபுநாடுகளுக்கு தலைமைவகித்து இஸ்ரேலை எதிர்ப்பதும் இந்நாடுகளுக்குப் பிடிக்கவில்லை.

எப்படியாவது அணைகட்டும் திட்டத்தை நிறைவேற்ற எகிப்து உறுதிகொண்டது. ஆங்கில, பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்த கால்வாயை திடீரென்று எகிப்து தேசத்தின் சொத்து என்று பிரகடனம் செய்தது, இதன் மூலம் அணைகட்ட எகிப்துக்கு கிட்டத்தட்ட வருடத்தில் 48கோடி ரூபாய் கிடைக்கும். இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் இது மிக ஆத்திரத்தை உண்டாக்கியது.

சூயஸ்கால்வாயை தேசீய மயமாக்கியதும் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகவும், கப்பல் போக்குவரவுக்கு எல்லா நாடுகளுக்கும் சமஉரிமை கொடுப்பதாகவும், அறிவிக்கப்பட்டது. கால்வாய் எகிப்தில இருப்பதாலும், எகிப்தின் ஏக போக உரிமை ஒத்துக்கொள்ளப்பட்டிருப்பதாலும், கால்வாய் வெட்டுவதில் ஆயிரக்கணக்கான எகிப்தியர் ஈடுபட்டு தங்கள் உயிரையே தியாகம் செய்ததாலும் அதன் பலனை அனுபவிக்க தங்களுக்கு உள்ள உரிமையை இதன் மூலம் அறிவித்தனர்.

சூயஸ்கால்வாயை பிரிட்டன் தனது ஜீவநாடியாகவே கருதி வந்தது. கால்வாயில் ஆதிக்கம் போய்விட்டால் அதன் செல்வாக்கும், கௌரவமும் பெரிதும் பாதிக்கப்படும். எனவே பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளைக்கொண்ட 15கால்வாய் உபயோகிக்கும் நாடுகள் லண்டனில் ஒன்றுகூடி யோசித்தன. ஆஸ்திரேலிய பிரதம மந்திரியை தலைவராகக்கொண்ட ஒரு கமிஷனை சமரசம் பேசுவதற்கு அனுப்பினார்கள். நாஸர் அதற்கு இணங்கவில்லை.

பிரிட்டனும், பிரெஞ்சும் தங்கள்படைகளை மத்தியதரைக்கடலில் தயாராக வைத்திருந்தன. படைபலத்தாலாவது கால்வாயைக் கைப்பற்ற தீர்மானித்தன. ஐக்கியநாட்டு ஸ்தாபனத்திடம் புகார் செய்யவில்லை. காமன் வெல்த் நாடுகளையோ, அமெரிக்காவையோ கலந்தாலோசிக்கவில்லை. இஸ்ரேல் எகிப்தை தாக்கிக்கொண்டிருந்த தருணத்தில் திடீரென்று விமான மூலம் எகிப்தை தாக்கின. கால்வாய் பகுதிகளில் துருப்புகளை இறக்கினர், இதற்கு அவர்கள் சொன்ன காரணம் விசித்திரமானது. இஸ்ரேலையும் எகிப்தையும் யுத்தத்திலிருந்து தடுப்பதற்காகவும், கால்வாய் பகுதியை பாதுகாப்பதற்காகவும் தலையிட்டதாக சொன்னார்கள். தாங்கள் செய்வது போலீஸ் பந்தோபஸ்து வேலையே தவிர எகிப்தின் மேல் படையெடுக்கவில்லை என்றும் சமாதானம் சொன்னார்கள்.

பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய இருபெரும் நாடுகள் எகிப்தை வலுத்தாக்குதல் செய்து சேதப்படுத்தியது உலகம் அறிந்தது. போர்ட்சையதின் பெரும்பகுதி நாசமாக்கப்பட்டது. கால்வாயின் பல இடங்கள் சேதமடைந்தன, கப்பல்கள் கால்வாயில் மூழ்கடிக்கப்பட்டன. எகிப்திய நகரங்கள் விமானத்தாக்குதல்களுக்கு இலக்காயின, எகிப்திய படைகளும் பொதுமக்களும் தாக்கப்பட்டனர்.

இதை உலகநாடுகள் அனைத்தும் கண்டித்தன. தாக்குதலை நிறுத்தாவிட்டால் உலக யுத்தம் மூளும் என்று ரஷ்யா எச்சரித்தது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளும், அமெரிக்காவும் முயற்சிசெய்து ஐ. நா.வின் மூலம் யுத்தத்தை நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. சூயஸ் கால்வாய் பிரதேசத்தில் சர்வதேச போலீஸ் படை அனுப்பப்பட்டது. ஐ. நா. உத்தரவின்படி பிரிட்டன்,பிரெஞ்சு, இஸ்ரேல் படைகள் சூயஸைவிட்டு புறப்பட தொடங்கி இருக்கின்றன. கால்வாயைத் துலக்கும் வேலையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கால்வாய் எகிப்தின் எல்லையில்தானே இருக்கிறது. எகிப்தியமக்களே அதைவெட்டினார்கள். ஏன் எகிப்து அதை தேசீய உடமையாக்கி அதன் வருமானத்தை தான் அனுப

விக்கக்கூடாது? இந்தக் கோரிக்கை நியாயமே. தவறு ஒன்றுமில்லை. ஆனால் பிரிட்டனும், பிரெஞ்சும் கால்வாய்ஒருதனிநாட்டின் சொத்தாக இருக்கக்கூடாது. சர்வதேச கூட்டுச் சொத்தாக இருக்கவேண்டும் என்கிறார்கள். அப்படியானால் பனமா கால்வாய்மட்டும் அமெரிக்காவின் கையில் இருக்கவில்லையா?

ஆஸ்திரேலியா, பிரெஞ்சு படையெடுப்பின் உண்மையான காரணங்கள் பல இருக்கின்றன. இந்த ஏகாதிபத்திய நாடுகள் எகிப்து எப்பொழுதும் பலஹீனமாய் இருப்பதையே விரும்பின. புரட்சியின் மூலம் நாஸர் அதிகாரத்திற்கு வந்ததை அவர்கள் விரும்பவில்லை. அரபுநாடுகளில் எகிப்தின் செல்வாக்கும், அரபுநாடுகளின் ஐக்கியமும் இவர்களுக்குப்பிடிக்கவில்லை. எகிப்து, அல்ஜீரியா, டூனிஸியா, மொராக்கோ ஆகிய பிரெஞ்சு காலனி நாடுகளின் புரட்சிக்கு ஆதரவு அளிப்பதை பிரான்ஸ் வெறுக்கிறது. அரபுநாடுகளில் தன் செல்வாக்கு குறைந்ததற்கு நாஸர்தான் காரணம்என்று பிரிட்டன் கருதுகிறது. எகிப்தின் படைபலத்தைக் குறைக்கவும் நாஸரைக் கவிழ்க்கவும் சமயம் பார்த்தனர்.

மத்தியகிழக்கு நாடுகளிலுள்ள எண்ணெய்க்கிணறுகளும், சுத்திசெய்யும் தொழிற்சாலைகளும் பிரிட்டனிடமும், அமெரிக்காவிடமும் இருக்கின்றன. கால்வாய் போக்குவரத்தும், எண்ணெய்வசதியும்உள்ள இப்பிரதேசத்தில் ரஷ்ய செல்வாக்கு பரவிவிடும் என்று பயந்தனர். பிரிட்டன் இழந்த தன் செல்வாக்கையும், புகழையும் திரும்பஸ்தாபிக்க ஆசைப்பட்டது. அரபுநாடுகளிடம் பாக்தாத் ஒப்பந்தம் என்பதை ஏற்படுத்தி பிளவு செய்துவரும் சூழ்ச்சியையும் எகிப்து எதிர்த்தது.

கால்வாயைத் திரும்பக் கைப்பற்றவும், எகிப்தை ஒடுக்குவதற்கும் ஆரம்பித்த இந்த தாக்குதல் பிரான்ஸுக்கும், பிரிட்டனுக்கும் பெரும் நஷ்டத்தையும், அவமானத்தையும் தான் தேடிக்கொடுத்தது.

பெரும்பான்மையான பிரிட்டிஷ் மக்களால் ஈடனின் ஆக்ரமிப்புக் கொள்கை கண்டிக்கப்பட்டதால் ஈடன் தனது பிரதம மந்திரி பதவியை ராஜினமா செய்ய நேர்ந்தது. சர்வதேச நிலைமையில் இந்த சூயஸ் தாக்குதல் பல எதிர்பாராத மாறுதல்களை விளைவித்திருக்கிறது. நெருங்கிய உறவுடன் இருந்துவரும் அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக்கும் பிளவு ஏற்பட்டது. காமன்வெல்த் கலையக்கூடிய அளவுக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நேசத்தை வளர்த்தது. அரபுநாடுகளின் தேசீய உணர்ச்சியையும் ஐக்கியத்தையும் வளர்த்தது.

வெகு சமீபத்தில் ஏற்பட்டுள்ள இதன் விபரீத விளைவையும் குறிப்பிட வேண்டும். மத்தியகிழக்கு நாடுகளில் பிரிட்டனின் ஆதிக்கமும், செல்வாக்கும் நீங்கிவிட்டதால் அங்கே சூன்யம் ஏற்பட்டிருக்கிறது என்றும் அதை பயன்படுத்தி ரஷ்யா நுழையாதாவென்றும் அதைத்தடுக்க அமெரிக்கா பொருளாதார, ஆயுத உதவியுடன் சென்று அவ்விடத்தை அடைக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் அறிவித்து, தனக்கு விசேட அதிகாரம் அளிக்க அமெரிக்க காங்கிரஸைக் கேட்டிருக்கிறார். இதுமிக அபத்தமானது. உலக அமைதிக்கே பெரும் தீங்கு விளைவிப்பது என்று சமீபத்தில் நேரு கூறியுள்ளார். இது ஒரு ஏகாதிபத்தியத்திற்கு பதில் இன்னொரு ஏகாதிபத்தியத்தை ஒத்துக் கொள்வதைத்தவிர வேறு ஒன்றுமில்லை. அந்தந்த பகுதி நாடுகள் தங்களை தாங்களே பலப்படுத்திக்கொள்வது சிறந்ததே தவிர அன்னியர் தலையிடுவது பெருந்தீங்காக முடியும்.பெரும் நாடுகளை அண்டியே சிறுநாடுகள் வாழவேண்டும் என்பது தவறான கொள்கையாகும். சூயஸ் பிரச்சனை ஒரு சில உண்மைகளை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இனி எந்த நாடும் இன்னொரு நாட்டை எக்காரணத்திற்காகவும் ஆக்கிரமிப்பது என்பது முடியாத காரியம். உலக அபிப்பிராயம் அதை சகிக்காது. அது பெரும்சக்தி வாய்ந்தது. உலக அபிப்பிராயத்திற்கு மாறாக எவ்வளவு செல்வாக்கு உள்ள நாடாக இருந்தாலும் தன் இஷ்டப்படி நடக்க முடியாது.

# ஏழை எழுத்தாளன்

தொல்காப்பியன்.

★

அழகான பொருள்களிலே அமுதந் தான் இருக்குமென எண்ணிவிட்டான் அந்த அவசரக்காரன். ஆனால் அதிலே ஆலகால நஞ்சும் இருக்குமென அவன் எண்ணியிருந் தால் இன்று ஓர் அகில உலக எழுத்தாள னுக்கூட ஆகியிருப்பான். பித்தளையை பத் தரைமாற்றுத் தங்கம் என்று எண்ணினன். அந்தோ! அந்த ஏழைஎழுத்தாளன்ஏமாற்றப் பட்டுவிட்டான்.

ஆம். அவன் ஓர் எழுத்தாளன்தான். உள்ளத்து உணர்ச்சிகளை வார்த்தை வடிவில் உருவாக்கித்தரும் சிற்பி அவன். அவன் எழுத்துக்களிலே கற்பனை ஊற்றுக் கரை புரண்டோடும். காதல் காட்சிகளை வர்ணிக் கும் போதெல்லாம் அந்தக் கதைமன்னன் மாப்பஸானைக் கூட மிஞ்சிவிடுவான். ஆனால் அவன் எதிர்கால வாழ்க்கைப் பிரதிபலித் தனவோ என்னவோ தெரியவில்லை அவன் கதைகள் எல்லாம் சோகத்தின் முடிவையே சொல்லிக்கொண்டிருந்தன.

எனினும் அந்தத் தென்னகத்து மாப்பா ஸான் எந்நேரமும் எழுதிக்கொண்டே இருந் தான். வண்ணத்தமிழ்பாடும் அந்தச் சின் னஞ்சிறு வானம்பாடி பண்ணிசைத்துக் காதல்கதைகள் பாடிக்கொண்டே இருந்தது.

ஒருநாள், மாலையில் நீலக்கடலிடையே நிமிர்ந்து வரும் அலைகளின் அழகை அள் ளிப்பருகிக் கொண்டிருந்தான், அந்த ஏழை எழுத்தாளன். அவன் உள்ளம் கற்பனைக் காவியம்பாடிக்கொண்டிருந்தது.அப்பொழுது தான் அந்த எழிலுடையாள் அவன் கண்க ளுக்குப் பட்டுவிட்டாள். அழகான உடைய ணிந்து ஆடிவரும் மின்னலைப்போல் அவள் வந்தாள். அந்தக்கட்டழகியைக் கண்டமாத்தி ரத்திலேயே அவன் கற்பனை எல்லாம் காணு மல் போய்விட்டது. ஆம். அந்த ஏந்திழை யாள் ஈர்த்துவிட்டாள்.

அவளுக்கு மட்டுமென்ன? வளர்ப்பா னேன். நீலத்திரைக்கடல் ஓரத்திலே அவன் அந்த நேரிழைக்காக நித்தம் தவம்செய்தான். அந்தக் காதல் தெய்வமும் தினம் தவருமல் காட்சிதந்து கொண்டிருந்தது. ஆனால் காத லிலே கட்டுண்ட அந்த எழுத்தாளன் காத லுள்ளே காமம்இருப்பினும் காமத்தில் காதல் இல்லை என்பதை மறந்தான். அந்தோ! அந்த அறியாமையினலே அவன் உடல் உருகித் தேய்ந்துகொண்டே வந்தது. எழுதக் கூடச்சக்தியற்று அவன் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன, ஆம், அந்த உணர்ச்சிக் கள்ளி அவன் உயிரைக் குடித்துக்கொண்டி ருந்தாள்.

குபேர குலத்துக் குழந்தையா அவன் சிதைந்த உடலைச் சீர்படுத்திக்கொள்ள? எப்படியாவது அவளுக்கும் தனக்கும் திரு மணம் ஆகிவிட்டால் பிறகு அந்த மருண்ட நோக்காளின் திரண்ட செல்வத்தால் தன் உடலை சீர்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணினன். அந்த ஒரே நம்பிக்கைதான் அவனுக்கு இருந்தது. ஆனால் அந்தச்சீமான் மகளோ செத்துக்கொண்டிருக்கும் அவனைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. அழகென்னும் ஆயுதத்தால் அந்த அப்பாவி எழுத்தாளனை அழித்துவிட்டு அவள் மாற்றுனின் மனைவி யாகத் திட்டம்போட்டுக்கொண்டிருந்தாள்.

"காதல் என்பது முத்துக்குச் சமானம். முத்துக்கள் எல்லாச் சிப்பிகளிலும் கிடைப்

---

முன் பக்கத் தொடர்ச்சி

ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் தங்கள் சுதந்திரத்தைப் பெரிதும் மதிக்கின்றன. ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தை அவை வெறுக்கின்றன.

தங்களுடைய பொருளாதார பிற்போக் கைமாற்ற தீவிர முயற்சி செய்கின்றன. பொருளாதார வசதிகளை அன்னியருடைய் நன்மைக்காக பயன்படுத்திக்கொள்ளவிட இனித்தயாராக இல்லை. சில தினங்களுக்கு முன்பு பிரிட்டிஷ், பிரெஞ்சு பாங்கிகளையும், இன்ஷுரன்ஸ் கம்பெனிகளையும் தேசீய மயமாக்கிவிட்டதாக எகிப்திய சர்க்கார் அறி வித்துள்ளனர்.

## நல்லவை கற்றல் :: :: தீயவை அழித்தல்.

வித்துவான். திரு. அடிகளாசிரியர்
[விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.]

நல்லது எங்குண் டேனும்
நானதை விரைந்து கற்பேன்
அல்லது எங்குண் டேனும்
அழித்திடற் கஞ்சேன் ஐயா!
தொல்புவி தன்னில் மாற்றான்
துன்னிவாழ் இல்ல மேனும்
வல்லழல் பிடித்த போது
வந்ததை அழியார் யாரே.

★

ஆந்திர நாட்டில் பிறந்து ஆந்திரம் பேசுவோரெல்லாரும் ஆந்திரராவதுபோல் தமிழ் நாட்டில் பிறந்து தமிழ்பேசுவோரெல்லாரும் தமிழரே யாவர்.

* * *

கல்வி கேள்வி ஆராய்ச்சி ஒழுக்கம் முதலியவற்றால் தம்மைப் பண்படுத்திக்கொண்டோர், அரசியல் வாழ்க்கையில் புகுவரேல், அவர் காணும் ஆபாசங்கள் அவரைத் தூய்மைபடுத்தவே துணைபுரியும். மற்றவர் அரசியல் வாழ்க்கையில் புகநேரின், ஆபாசங்கள் அவரை அரக்கராக்கும், கயவராக்கும், ஈனராக்கும். ஆதலின் அரசியல் வாழ்க்கை, நலமும் செய்வதாகும் தீமையும் செய்வதாகும்.

திரு. வி. க.

---

பதில்லை. அதைப்போல் உண்மைக் காதலை எல்லாப் பெண்களிடமும் எதிர்பார்க்க முடியாது" என்று அவன் எண்ணவில்லை. அந்தோ! ஓர் நாள் மாற்றானின் தாலிக்குக் கழுத்தை நீட்டிவிட்டாள் அந்தக் கட்டழகுடைய கருநாகம். கதறிக்கொண்டிருந்தான் அவன். வேறு என்ன செய்யமுடியும் அந்த ஏழை? அப்போதுதான் உணர்ந்தான் உலகத்தை, "காதலுக்கு இறப்பதானால்கூட மகிழ்வாயிற்றே. ஆனால் நானே காதலிக்கப்படவே இல்லை. காமத்தைத்தணிக்கும் கருவியாக எண்ணப்பட்டேன். ஏமாற்றப்பட்டேன்" என்று இரத்தக்கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தான் அவன்.

அவன் கதை எழுதிய நாட்களிலே அவனை வானளாவப் புகழ்ந்தவர்கள் இன்று வாயசைக்கக்கூட இல்லை. அன்று பாயிரம் பாடியவர்கள் இன்று ஆயிரம் முழம் அப்பால் ஒதுங்கிச்சென்றார்கள்.

அவன் எழுத்தையே நம்பிக்கொண்டிருந்தான். அதையே தன்வாழ்வின் இலட்சிய கீதமாகக் கொண்டிருந்தான், காதல் கண்ட பெண்களிடத்திலெல்லாம் கிடைக்குமென்று எண்ணினான். அதற்கே தன் உயிரை பணயம்வைத்தான். ஆனால் வாழ்க்கையில் ஒன்றுகூட அவனுக்கு உதவவில்லை. எல்லாம் அவன் உயிரைக் குடிக்கவே உபயோகப்பட்டன.

ஒருகாலத்தில் கற்பனைவானிலே பறந்துகொண்டிருந்த அந்த வானம்பாடி இன்று இறந்துவிட்டது. தொடி அணிந்த கையாளின் பிடியிலே தூங்கிக்கொண்டிருந்த உடல் இன்று தொடுவாரற்றுக்கிடந்தது. ஐயகோ! நினைக்கக்கூடமுடியாதது நிகழ்ந்துவிட்டது. நடக்கக்கூடாததொரு செயல் நடந்தேறிவிட்டது. ஆம். அந்த எழுத்துலகமேதை இன்று நாதியற்றுச் செத்துவிட்டான்.

★

# கவிமணியின் வாடாமலர்கள்.

தெ. பா. பெருமாள்

கவிஞன் இதயத்தை உணர்ச்சி தாக்கும் போது கவிதை மலர்கிறது. இது வடிவமைந்து,அழகுபெற்று, இசையுடன்இணைந்து, மலர்க்காட்டில் சுற்றித்திரியும் மோகினிபோல் மின்னித்திகழ்கிறது; கற்பவர் உள்ளப் பூங்காவில் என்றும் விதவித பண்முரலும் தேன் வண்டாய், உணர்ச்சிப்பெருக்கில் நாதம் இசைக்கும் பூங்குயிலாய் நடனம் செய்கிறது. சிறந்த கவிதைகள் புதுமைக்குப் புதுமையாய் இனிமைக்கும் இனிமையாய் நின்று நிலவி காலத்தைக் கடந்து அமரநிலைபெற்று விடுகின்றன.

ஒரு கவிஞனின் கவிதைகளைப் படித்துணரும்போது, அவன் சூழ்நிலையை அறிய வேண்டும். அமரக்கவிஞனின் அற்புதக் கவிதைப் படைப்புக்கள் காலத்தின்கண்ணுடிகள்; அவன் காலத்திய சரித்திரம் அவன் கவிதையிலே நிழலாடும்; சுவையான நிகழ்ச்சிகளின் கோர்வை அவைகளில் சுடர்வீசும், இவற்றுடன் அவனது இதயத்தின் விருப்பு வெறுப்பு, இன்பதுன்பம், சிலவற்றில் அவனுக்குள்ள அளவு கடந்த ஈடுபாடு இவைபோன்ற பலவும் அவனது கவிதைகளிலே சாயலிடக் காணலாம். இவைகளை ஓரளவு நாம் உணர்ந்துகொண்டால், அவனது கவிதைகள் இன்னும் நமக்கு சுவையாக இன்பமளிக்கத் தக்கனவாயிருக்கும்.

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் பல சூழ்நிலைகளில் இத்தகைய பல கவிதைகள் பாடியிருககிருர். தாம்கண்ட காட்சிகளில், அனுபவித்த அனுபவங்களில் இவரது இதயம் உணர்ச்சியால் விம்மிதம் எய்தியபோது தோன்றிய கவிதைகளே இவை. இவைகளில் பல இன்பதுன்பச் சூழ்நிலைகளிலும், பல இவரது நெஞ்சம் இறைவழிபாட்டில் ஒன்றியிருந்தபோதும், பல இவர் கண்ட காட்சி களிலிருந்தும் உருவானவையாகும்.

கவிமணியின் இளம்பருவத்தில் இவர் பிறந்த தேரூர் நல்லமாடன் கோவிலில் வழிபாடு (கொடை) நடந்து கொண்டிருந்த பொழுது ஊர்மக்கள் அனைவரும் உள்ளக் களிப்புடன் ஒருங்கு திரண்டு ஆலயத்தில் குழுமியிருந்தனர். பக்தியுணர்ச்சி இவர்களை பற்றிப்பிணையலாயிற்று.

பம்பை, செண்டை, முரசு, நாதசுரம் ஆகிய இசைக்கருவிகளின் முழக்கம் செவிகளைச் செவிடுபடச் செய்தன. மலர், கலயம் போன்ற சாத்துக்களின் மணம் "கம்"மென கமழ்ந்தது. அகிற்புகை ஆலயமெங்கும் பரவி எதுவும் தெரியாத விதத்தில் விழிகளை மறைத்துத்திறையிட்டிருந்தது.

தெய்வ உருவத்தின் முன்னிலையில் சாமிகொண்டாடி பக்திவெறியில் வந்து நின்ருர். இசைக்கருவிகள் இவரது வெறியை இன்னும் மிகைப்படுத்தும் நிலையில் அவற்றின்குமை உச்சநிலையில் அலறின. சாமிகொண்டாடி "ஓ-ஓ"வெனக் கூக்குரலிட்டு துள்ளித்துள்ளியாடினர் இவர்மீது தெய்வம் வந்துவிட்டதாக எல்லோரும் எண்ணினர். வெண்ணீற்றுக் கொப்பரையை கையிலேந்திய வண்ணம் இவர் "கொண்டு வா- பலியை" என முழங்கினுர். உடனே பலிபீடததில் ஆட்டுக்கடா ஒன்று கொண்டு வந்து நிறுத்தப் பட்டது. அதன் நெற்றியில் மஞ்சள் தேய்க்கப்பெற்று. கழுத்தில் மலர்மாலை அணியப் பெற்றிருந்தது. சிறிது பொழுதில், தன்னுயிர் போகப்போகிறது என்பதை உணர்ந்தது. போல் அந்த வாய்பேசா விலங்கு நெஞ்சுகுமுறி துடித்துக் கதறியது.



[24-ம் பக்கம் பார்க்க]

# அறத்தின் மாட்சி

அறவாணன்

நம் மொழி நறுமணம் பரப்பும் ஒரு மலர்க்காடு. அம்மலர்க்காட்டில் இருக்கும் பல வண்ண மலர்களின் நறவினை உண்டு மகிழ்ந்து உவகையுடன் எதிர்கால வழித் தோன்றல்களுக்கு பயன்படட்டும் என்ற நல் லெண்ணத்தின் விளைவால் அழகியதொரு அழியாத சங்க இலக்கியத் தேன்கூட்டை அளித்து விட்டுச் சென்றவர்கள் நம் புலவர் பெருமக்களேயாவர். அவர்கள் அனைவரும் இலக்கியத் தேனீக்கள். இக்காரணம் பற்றித் தான் புரட்சிக் கவிஞர், பாரதிதாசன் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது "கன்னற் பொருள் தரும் தமிழே, நீயோர் பூக்காடு நானோர் தும்பி" என்று பாடுகிறார்.

சங்க இலக்கியமாம் தேன்கூட்டை ஒரு புலவர் மட்டும் தனித்தே கட்டிவிடவில்லை. மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் ஒருங்கே அமையப்பெற்ற பல புலவர் பெருமக்கள் ஒன்றாக உழைத்து உருவாக்கி இருக்கிறார்கள். அக்காலப் புலவர் பெருமக்கள் அனைவரும் "நடுவூர் நச்சுமரமாக" இல்லாது "உள்ளூர்ப் பழுமரமாக" பிறர் நலம் பேணும் பெருங்குணம் படைத்தோராக வாழ்ந்திருக்கின்றனர். அதே சமயத்தில் நல்லனவற்றைப் பாராட்டியும், அல்லவனவற்றைக் கடிந்தும் வந்திருக்கின்றனர். "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றபடிக்கு எப்பொருளிலும் மெய்ப்பொருள் கண்டு நெஞ்சங்கரவாது வாழ்ந்திருக்கின்றனர். நெறி பிறழ்ந்து செல்வோர் நாடு கெழு செல்வத்து பீடு கெழு வேந்தராயினும், பகடு நடந்த கூழ் பல்லோரோடுண்ணும் பண்பினராயினும் யாவரையும் இடித்துக் கூறி தீதொரீஇ நன்றின்பால் ஆற்றுப்படுத்தி இருக்கின்றனர். இப்படி ஆற்றுப்படுத்தியோர் எண்ணிக்கை அளவில. அதேபோல் ஆற்றுப்பட்டோரின் எண்ணிக்கையும் அளவில. இப்படி ஆற்றுப்படுத்திய, நல்வழி காட்டிய ஒரு புலவர் பெருமகனையும் ஈண்டு காண்போம்.

இன்று நல்ல பல இலக்கியங்களை நாம் பெற்றிருப்பதற்குக் காரணமாக விளங்கிய பெருமை பாண்டியர்களையே சாரும். அவர்கள் புலவர் பெருமக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த காரணத்தினால்தான் நம்மால் சங்க இலக்கியங்களைக் காண முடிகிறது. இல்லையேல் கரையானுக்கும், கடல்கோளுக்கும், எரி நெருப்பிற்கும், பிறமொழியாளரின் ஆதிக்க வெறிக்கும் அழிந்து ஒழிந்துபோன எண்ணற்ற ஏடுகள் போல, மிஞ்சியிருக்கும் இவ்வேடுகளும் அழிந்து ஒழிந்துபோயிருக்கு மென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எனவே நமக்கும், நமது மொழிக்கும், நமது நாட்டிற்கும் உதவிய பாண்டிய மன்னர்களை நாம் நெஞ்சார, வாயார வாழ்த்தக்கடமைப்பட்டவர்களாவோம். இத்தகு சீரும் சிறப்புமிக்க மரபிலே தோன்றியவன் தான் "பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறன்" இவன் முடியுடை மூவேந்தரிலும் சிறப்பு மிக்கவனாக விளங்கியவன். இவன் சென்ற இடத்திலெல்லாம் வாகை சூடியவன். இவனது அரண்மனையில் புலவர் பெருமக்களை நாள்தோறும் காணலாம். இவனது வீரத்தையும், நெஞ்சின் ஈரத்தையும் பல புலவர்கள் பலபடப் பாடியுள்ளனர். அவற்றை புறநானூறு நமக்கு அறிவிக்கின்றது.

மதுரை மருதனிள நாகனார் என்றபுலவர் பெருமான் இவனது வீரத்தையும், கொடைச் சிறப்பையும் கேள்விப்பட்டு காணச் செல்கின்றார். பாண்டியன் புலவரைக் கண்டதும் பரிசில் தராது காலத்தை நீட்டித்தான். அதனால் புலவர் அரண்மனையில் தங்கிஇருக்க வேண்டியதாயிற்று. அக்காலை அம்மன்னனது செயல்களை நன்கு கவனிக்கிறார். அவனது நோக்கமனைத்தும் மறத்தின் வழியே செல்வதைக்கண்டார். அவனது நோக்கத்தை அறத்தின் வழியிலே திருப்ப வேண்டுமென நினைத்த புலவர், அவனை வாழ்த்துவதுபோல அறத்தின் மாட்சியை நன்கு வலியுறுத்திக்

16-ம் பக்கம் பார்க்க

# அன்றும் — இன்றும்.

★

பறம்பை மு. ச. இராசன்.

இன்றல்ல நேற்றல்ல பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாம் இன்று காணும் தமிழகத்தையோ இந்தியாவையோ இப்படிக் கண்டிருகக முடியாது. வேறு எப்படிக் காணலாம் என்ருல். விந்தியமலேக்கு வடக்கே இமயமலே வரை உள்ள பகுதி கடலுள் மூழ்கியும் விந்தியமலேக்கு தெற்கே இன்றிருக்கும் கன்னியாகுமரி முனேக்கும் தெற்கே அதாவது இந்துமகாசமுத்திரத்தில் பெரும் பகுதி நிலப்பரப்பாகவும், இந்நிலப்பரப்போடு பர்மா, சீனு, சுமத்திரா, போன்றன சேர்ந்தும் ஒரே நிலப்பரப்பாகக் காணலாம். இந்நிலப்பரப்பிற்கு பௌதீக நூலார் கூறும் பெயர் "லெமோரியாக்கண்டம்"என்பது. ஆனல் நம் தமிழர்கள் "குமரிக்கண்டம்" என்றே பெயரிட்டனராம். பின்பு இயற்கையின் சீற்றத்தால் கடல் பொங்க, நில நடுக்கம்(பூகம்பம்) ஏற்பட நிலமான பகுதிகள் கடலுள் மூழ்கின. நீருட் கிடந்த பகுதிகள் நிலமாக வெளிப்போந்தன. நீருள் மூழ்கியவற்றில் தமிழ் நாட்டின் பெரும் பகுதி அழிந்தது ஒருசில பகுதிகள் தனித்தனியாகப் பிரிந்தன. புதிதாக ஏற்பட்ட பகுதியில் இன்றுள்ள வட நாட்டோடு இமயமலேயும் ஆகும் என்கின்றனர் பெரியோர்,

தமிழ்நாட்டின் பெரும்பகுதி கடலால் அழிக்கப்படுமுன் அங்கு வாழ்ந்த மக்கள் வாழ்க்கைத் துறையிலும், மொழித்துறையிலும் சிறந்து விளங்கினர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். மொழித்துறையில் விருப்புக்கொண்ட மக்கள் உலகமெங்கும் தமிழ்மொழியைப் பரப்ப சங்கம் வைத்தனர். இதற்குத் தலேச்சங்கம் எனப்பெயர். இது பல ஆயிரம் ஆண்டுகள் வளர்ந்து வரும்பொழுது கடல்பொங்கியது. தமிழ் நாட்டின் பெரும் பகுதி அழிவுற்றது. அந்நிலப்பரப்பில் உள்ள சங்கமும் சங்கத்திலுள்ள எண்ணிலா நூல்களும் அழிந்தன. இச்சங்கத்திற்குத் தலேவர் திரிபுரம் எறித்த விரிசடைக்கடவுளான சிவபெருமான் என்பார். இன்னும் அவர் செய்த நன்றிமறவாது கடவுள் என்னும் பெயர் கொடுத்து போற்றி வருகிருேம் நன்றி மறவாத்தமிழ்க்குடிகளாய நாம்.

பின்பு கபாடபுரம் என்னுமிடத்தில் மீண்டும் சங்கம் நிறுவி தமிழ் வளர்த்தார். இதனே இடைச்சங்கம் என்பர், இதுவும் பலவாயிரம் ஆண்டுகளுக்குப் பின் கடல் கோளுக்கு உட்பட்டது. இச்சங்கத்தின் தலேவராயிருந்தவர் அகத்திய முனிவர். இவர் தமிழிலக்கணம் செய்துள்ளதாக ஆங்காங்கு ஒருசில குறிப்புகள் காணப்படுகின்றன, ஆயினும் முழு நூல் கிடைக்கவில்லே அகத்தியரைப் பற்றிய கதைகள் பல உள்ளன. எது எப்படியாயினும் "அகத்திய முனிவன்" என்ற பெயரையும் பெயரின் பொருளேயும் ஆழ்ந்து நோக்குமிடத்து தூய தமிழனே என்பது துணிபாம். இவரிடம் பாடம் படித்தவர் பன்னிரண்டு பேர். அவருள் தொல்காப்பியர், பனம்பாரனர் என்பவரும் ஆவர். தொல்காப்பியர் தமிழ்மொழியில் உள்ள இலங்கியங்களேப் படித்தும் வேறுபல இலக்கணங்களின் துணேகொண்டும் புதியதோர் இலக்கணம் செய்தார். அதுவே முழு நூலாக நம் முன் காணப்படுகிறது. வேறுபல மாணுக்கரும் பல நூல் செய்திருக்கலாம். அந்தோ! அவற்றைக் காண நம் கண்களுக்குப் பார்வை போதாதுபோலும். தொல்காப்பியர் என்பவர்.

ஆரியர் என்றூர் உரையாசியர் உள்ளிட்ட பலரும். தொல்காப்பியம் என்பதற்குப் பொருள் "பழமையைக் காப்பது" என்பதாம். இப்பொருள் பொதிந்த தொடர் வடமொழி யாகுமா? செந்தமிழ்ப் பெயருடையாரை ஆரியர் என்றூல் எங்ஙனம் பொருந்தும்? இச்செய்தி ஆன்றோர் பலரால் ஆராயாது விடப்பட்டமையின் சிறியேனும் வினவோடு நிறுத்தி மேலே போந்தேன்.

இனி கடைச்சங்கம் கி. பி. 250 வரை தங்குதடையின்றி மங்கல வாழ்த்து முழங்க சங்கம் வளர்ந்ததுஏறத்தாழ2000ஆண்டுகள். இச்சங்க காலத்திலே தான் இலக்கியங்கள் பல தோன்றின. கடைச்சங்க காலத்தின் கடைசியில் ஏற்பட்ட நூல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலே போன்றன. இக்காலத்திலே பலவகைச் சாதியாரும் அவரால் புகுத்தப்பட்ட நால்வகைச் சாதி பாகுபாடும் தெய்வம் தொழலும் ஆயவை தமிழர்களோடு நன்கு கலக்கத்தொடங்கின. இதனைக் கீழ் வரும் பெரியோர் வாக்குகள் நன்கு வலியுறுத்தும்.

1, "வடநாட்டினர் கூட்டுறவால் நாற்குலப் பிரிவு தலைகாட்டிற்று"—கா. சுப்பிரமணியபிள்ளை.

2. "நால்வகைச் சாதியிந் நாட்டினிர் நாட்டினீர்" கபிலர் அகவல்

3. "கடைச்சங்க காலத்திலே தமிழ்மக்கள் வட நாட்டிலிருந்து ஆரியரால் கொண்டுவரப்பட்ட பிற தெய்வங்களின் வழிபாட்டையும் கைக்கொண்டனர்"—கா. சு. பிள்ளை.

4 "பார்ப்பனர்கள் புராணக்கருத்துக்களோடும் "விக்கிரக ஆராதனைமுறை" என்னும் உருவ வழிபாட்டோடும் இச்சொல்லும்தமிழ்நாட்டினுள் புகுத்தப்பட்டதாகும்"—கால்டுவெல்.

இப்படி பல்வேறு ஜாதியினர் தமிழினத்தில் கலக்குமுன் தமிழர்கள் மொழி, மண முறை, வாணிபம், அரசாட்சி போன்ற பல் வேறு துறைகளிலும் வேறு எல்லா நாட்டைக்காட்டிலும் தலைசிறந்து விளங்கினர்.

## மொழி:

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பகுப்பாக பிரிக்கப்பட்டு வழங்கியது. இயல் என்பது இலக்கணத்திற்குக்கட்டுப்பட்டு நல்வழி நல்கும் செல்வச் செய்யுட்களாளே ஆக்கப்பட்டது. சங்க இயல் நூலகள் கலித்தொகை, புறநானூறு, பதிற்றுபபத்து, குறுந்தொகை, போன்றன. இவை பட்டைதீட்டப்பெறும் விலேஉயர்ந்த கற்கள் பட்டை தீட்டத்தீட்ட பொலிவுபெறும். இக காலத்தும் செய்யுட்கள் வெளிவருகின்றன அவற்றின் திறன் என்னே! சூப்பி எரியும் நாருடைய மாங் கொட்டைகள் ஒக்கும். இனியும் எந்நிலே எய்துமோ?

இசை என்பது தமிழர்களால் விரும்பி உண்ணப்பட்ட அமுதம். இதனைக்கடைந் தெடுத்து உருவாக்க குழலும் யாழும் பயன் படுத்தப்பட்டன. நிலத்திற்குத் தக்கபடி பண்களாகப் பகுத்து அவற்றைத் திறன்களாகவும் ஆக்கிப் பயன்படுத்தினர். பண்கள் 103 எனவும், பாடும் தொழில்கள் 8வகை எனவும் பண்ணல் வகை 8 எனவும் வண்ணங்கள்76 எனவும் இசையைப் பகுத்துப் பாடிவந்தனர் என்ற பட்டியலே பரிமேலழகர் 573ம்குறளுக்கு உரை எழுதும் பொழுது சுட்டுகிறூர். பண்களைப் பாடியே வாழும் கூட்டமும் இருந்ததாகவும் அவருக்குப் பெயர் பாணர் எனவும் பாணுற்றுப் படைகள் சான்று பகர்கின்றன. இக்காலத்தில் சங்ககாலத்து இசையழிந்து "ஜாலிடோய் சும்காரு........" வில் வந்து நிற்கிறது. வெட்கம்! வெட்கம்!! இம்மாதிரி இசை கேட்டு கூத்தாடும் நம் நிலேமை. "என்று நம் தமிழர்கள் இம்மாதிரி இசையை வெறுத்து, இலக்கண வரம்பிற்கு உட்பட்ட பாக்களைத் தமிழ்ப்பண்கூட்டிப்பாடுகின்றனரோ, அன்று தமிழர்கள் நல்வாழ்வு வாழத்தொடங்குவார்கள்" என்றூர் பண்டித கேசவராம சாமித்தேவர் அவர்கள்.

நாடகக்கலே பற்றி ஆங்காங்கு ஒரு சில குறிப்புகளே காணப்படுகின்றன. சங்ககாலத்திலே மக்கள் மன்றங்களிலே நாடகங்கள் நடத்தும் பழக்கம் உண்டு என்பதை "கூத்தாட்டவைக் குழாம்" என்ற திருக்குறள் புலப்படுத்தும். நாடக நூல்கள் பல இருந்தாகவும் அவை காலச்சுழலிலும் கொடுமை

கூறிவிடுகிறார். பாண்டியனைப் பார்த்து "பாண்டிய மன்னனே! நீயோ யானைப்படையையும், குதிரைப்படையையும், தேர்ப்படையையும், காலாட்படையையும் பெற்றிருக்கிற காரணத்தினால் உனது ஆட்சி மாட்சியுடையதாகிவிடாது. அறத்தின் வழியிலே நடந்தால்தான் உனது ஆட்சி மாட்சியைப் பெறும். எனவே பகைவன், சுற்றத்தான், வேண்டியவன், வேண்டாதவன் என்ற வேறுபாடு காட்டாமல் அனைவருக்கும் ஒரே நீதி வழங்கும் செங்கோல் முறையில் நீ நடப்பாயாக. ஞாயிறு போன்ற ஆண்மையும், திங்கள் போன்ற தண்மையும், வானம் போன்ற வண்மையும் பெற்று, இல்லார் உனது நாட்டில் இல்லாமற்போக நெடுங்காலம் நீ நீடூழி வாழ்க!" என்று வாழ்த்துகிறார்.

"வேந்துமேம் பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட(மறவரும்என
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல் கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்றும்
உடையை யாகி யில்லோர் கையற
நீ நீடு வாழிய....... ... ........"

புலவர் மருதனிளநாகனார் எவ்வளவு அழகாக நன்மாறனுக்கு அறத்தின் மாட்சியை விளக்குகிறார் பாருங்கள்! இத்தகு ஆற்றல் புலவர் பெருமக்கட்குத்தான் உண்டு! இதே கருததைத்தான் வள்ளுவரின் பொருட்பாலும் நமக்கு அறிவிக்கிறது.

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்"

இவ்விரு புலவர்களின் கருத்தும் 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பதை நினைக்கும்போது நம்உள்ளம் பெருமிதமடைகிறது. ஆனால் இன்று உலகில் நீர்க்குண்டையும், அணுக்குண்டையும் பெருக்குவோர் இவ்வறிவுரைகள் காட்டும் அறத்தின் வழியில் செல்வார்களேயானால் உலகம் நெடுநாள் வாழும்.

# மகிழாதவன் ஒரு பேதையடா!

—[ வருத. சுப்பிரமணியன் ]—

★

மழலை மொழியொரு கீதமடா அதில்
மகிழா தவனொரு பேதையடா!
வள்ளுவன் தனது வாய்மொழி யினிலே
தெள்ளென விளக்கினன் தூய்மை கலை
உள்ளம் உருக்கும்பல நீதியடா—அதில்
உலகமே சுழலும் காட்சியடா!
கன்னல் மொழியாம் எங்கள் தமிழ்மொழிக்கு
பன்னூல் வலபல புலவர்க ளுண்டு
அறம்பொ ருளின்பம் கண்டவர்கள்—அவர்
திறமும் நம்மிடை உலவுதடா!

---

முன் பக்கத்தொடர்ச்சி

யோர் பலராலும் அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பர் அறிஞர் பலர். சங்கநூல்களில் நாடக நூலாக சிலப்பதிகாரம் இருப்பதுகண்டு மனம் மகிழ்வார் தமிழர் அனைவரும். நாடகக்கலை சமணரால் வெறுக்கப்பட்டு ஒழிக்கப்பட்டாலும் இன்று இயல் இசை, இரண்டைக் காட்டிலும் தலையாய நிலையில் உள்ளது.

## மணமுறை:

தமிழர் மணமுறையைச் சிறிது காணலாம். ஒத்த வயது வந்த இருவர் ஒருவரை ஒருவர்கண்டு, காதல்கொண்டு அது அரும்பி போதாகி மலரும். பின் தலைவன் தன் சுற்றத்தாரிடம் சென்று தான் விரும்பி காதலித்த பெண்ணை மணம் பேசி வரவேண்டுவான். பின் பலர் அறிய திருமணம் நடக்கும். இது நாளடைவில் ஆரியர் மணமுறையைத் தழுவி பல்வேறு நிலையடைந்து இன்று பாழ் நிலை எய்தியுள்ளது. உண்மைக்காதல் நிலை என்று உலகினில் வாழுமோ அன்றுதான் தமிழரின் ஒற்றுமையைக் காணமுடியும். தமிழர்களின் மறை நூலாகிய திருக்குறளை, ஓதி உணர்ந்து நடக்க முடியாத குட்ட முத்திய கண் காது நெஞ்சம் உடையவர்களாக இருக்கிறோம். [தொடரும்]

# கண்ணீர்

இரணியல் 'கலே'

என் தோழன் ஒருவன் எழுதிய "அன்பு அலறுகிறது" என்ற நாடகத்திற்கு என்னை தலைமை வகிக்க அழைத்திருந்தார்கள். நாடகதத்தின் சிறப்பிலே நான் என் இதயத்தையே பறிகொடுத்துவிடடேன் என்றுதான்சொல்ல வேண்டும். என் நண்பனுக்கு இத்தனை அழகாக நாடகத்திற்கு வசனம் எழுதத் தெரியும் என்பதை அறிந்தவுடன் நான் மகிழ்ச்சியால் பூரித்தேன். ஏன் என்ருல் .... அவனை இந்த எழுத்துலகிற்கு இழுத்தவனே நான்தான்.

நான் எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்தபோது எப்படியாவது புகழ் பெற்ற எழுத்தாளன் ஆகிவிடவேண்டும் என்ற ஆவலில் கதைகள் எழுதி பத்திரிக்கைகளுக்கு அனுப்பத் தொடங்கினேன் ஆனல் "தபால் அலுவலகத்தினர்" என் கதைகளை பத்திரிக்கைஅலுவலகத்திற்குக்கொடுக்காமல் என் கதைகளை 'அபேஸ்' செய்கிருர்களோ, என்றுகூடஐயப்பட்டேன்.ஏன்தெரியுமா?என் கதைகள் போனசுவடே தெரியவில்லை. இந்த தோல்வி என்ஆசையைத்தகர்த்துவிடவில்லை. மாருக என்னைத் திரும்பவும் முயற்சிக்கத் தூண்டின! அப்பப்பா! தமிழ்நாட்டு எழுத்துலகில் நான் ஒருவழியாக நிரந்தர இடத்தை பிடித்துக் கொண்டேன். அந்தக்காலத்தில் தான் தற்செயலாக என் நண்பன் எழுதியிருந்த கதை ஒன்றின் கையெழுத்துப் பிரதியை நான் காண நேர்ந்தது. ஒரு பிரபல பத்திரிக்கையிலிருந்து அது திரும்பிவந்தது. அந்த முதல் தோல்வியைக்கண்டு எல்லாமே மூழ்கிவிட்டதுபோல் அமர்ந்திருந்தான். அவனுடைய தோல்வி மனப்பான்மையை மாற்ற எண்ணிச் சொன்னேன் "நண்ப! நான்கூட இந்த நிலைக்கு வருவதற்குமுன் எத்தனையோ தோல்விகளைச் சந்திக்க வேண்டியிருந்தது தெரியுமா? புகழ்பெற்ற எழுத்தாளர்களின் கருத்தற்ற குப்பைகளுக்குக்கூட கலர்பார்டர் இட்டுப்பிரசுரிக்கும்பத்திரிகைகள் உன்னைப் போன்ற ஆரம்ப எழுத்தாளர்களின் நல்ல ஓவியங்களைக்கூட பிரசுரிக்க முன்வராது. தோல்வியைக் கண்டு அதைரியப்படாதே" என்று உபதேசித்தேன்.

அவன் என் உபதேசத்தை கீதோபதேசமாக எடுத்துக்கொண்டானே என்னமோ? தெரியாது! சிலநாட்களுக்குப் பிறகு அவனுடைய நாடகங்களில்பல பட்டிதொட்டிகளிலெல்லாம் நடிக்கப்பட்டு பாராட்டப்படுவதை அறிந்து மகிழ்ந்தேன்.

சிறுகதை உலகம் அவனுக்குத் தோல்வியைத் தந்தது! ஆனல் நாடக உலகம் அபரிதமான புகழைத்தந்தது.

மேல்நாட்டு நாடகாசிரியர்கள் பலர் கூலிவேலை செய்து பிழைக்கும் ஏழைக்குப் பிறந்து விடாமுயற்சியால் புகழ் ஏணியின் உச்சியில் ஏறினர்கள் என்பதை அறிந்திருக்கிறேன் ஆனல என் நண்பன்! தாழ்த்தபட்ட வகுப்பில் பிறந்தவன். குடும்பமோ ஏழை. அப்படிப்பட்ட இடத்தில பிறந்த என் நண்பன் நாடக உலகில் புகழ்கொடி பறக்க விடுவதைககண்டு நான் பெருமைப்படாமல் இருக்கமுடியுமா?

ஆனல் புகழும் பெருமையும் போய்ச் சேரும் இடத்தைச் சுற்றி பொருமைக்கண்கள் வட்டமிடாமல் இருக்குமா?

"நேற்றுவரை நம்ம வீட்டிலே பண்ணை வேலைசெய்துகிட்டுஎச்சியிலையைப் பொறுக்கி தின்ற பசங்களெல்லாம் நாடகமாடுகிருனுங்களாம் கூத்தாடிப்பசங்க! இவங்க என்ன கருத்தைஅள்ளிவீசுவாங்களோ? மகா பெரிய அறிஞர்கள். பாரதத்திலேயும் ராமாயணத்திலேயும் இல்லாத மகா கருத்து! சே ..... சே.... வர வர எல்லாம் கெட்டுப்போச்சு! முன்னையெல்லாம் ஹரிச்சந்திரா பக்த ராமதாஸ் ...நல்லதங்காள் ஆஹா. ... எப்படியிருக்கும்! இப்பவும் நடிக்கிருங்களே "ஓர் இரவு!" அன்புஅலறுகிறது! ..சே. சே"

ஆமாம்! தாழ்ந்தவர்கள் உயர்ந்துவிட்டாலே இப்படித்தான். அவர்களைப்பற்றி

பொல்லாங்கு பேச எத்தனையோ பேர் தயாராய் இருப்பார்களே.

ஆனல் என் நண்பனைப்பற்றி நான் கேள்விபட்ட ஒரு செய்திதான் எனக்கு மனவேதனையை உண்டுபண்ணிவிட்டது.

"அவனுடைய நாடகங்களில் எல்லாம் நடிக்கும் 'ஒரு நாடகக்காரியை' அவன் சுற்றிக்கொண்டு திரிகிருன்!" என்பது தான் அந்தச்செய்தி.

"அப்படியும் இருக்குமா?" என்று என் மனம் துள்ளிப்பாய்ந்தது.

"என் நாடகம் நடிக்கப்பட வேண்டுமானல் அதில் 'இந்தப்பெண்' நடித்துத்தான் ஆகவேண்டும்!" என்று நிபந்தனை இடுவதாகக்கூட கேள்விப்பட்டேன்.

"சே! சே! என் தோழனைப்பற்றி தப்புக் கணக்கு போடுகின்ருர்களே!" என்றுதான் எண்ணிக் கண்ணீர்விட்டேன்.

என் நண்பனைப் போன்று அன்பைப் பிரசாரம் செய்கிறவர்கள் கேவலம் நாடகக் கணிகையின் கண்வீச்சில் உள்ளத்தைப்பறி கொடுக்கமாட்டார்கள் என்று என்னையே நான் தேற்றிக்கொண்டேன்.

"அன்பு அலறுகிறது" நாடகத்திற்கு தலைமை வகித்தபோது எனக்கு இந்த எண்ணம் திரும்பவும் ஏற்பட்டது ஏன் என்ருல் என் நண்பன்தான் கதாநாயகனக நடித்தான். அவனுடைய காதலியாய் நடித்த அந்த நாடகக்காரியோடு அவன் நெருங்கி நடித்த விதம் என்னை அப்படி எண்ணத் தோன்றியது.

"ஒருவேளை ஊரார்சொல்வதில்உண்மை இருக்கலாமோ!" என்று எண்ணினேன்.

எதற்கும் நாடகம் முடிந்தவுடன் அவனையே அதுபற்றி கேட்டுவிடுவது என்று முடிவுசெய்து கொண்டேன். நாடகம் முடிந்தது! நாடகத்தைப் பாராட்டிப் பேசிவிட்டு உட்கார்ந்தேன். கூட்டம் கலையத் தொடங்கியது. என் கால்கள் 'கிரீன்ரூமை' நோக்கி நடந்தன. உள்ளே இருந்து பேச்சுக்குரல் கேட்டது அப்படியேநின்றேன்.

"இன்று உன் நடிப்பு அபாரம்"

"எலலாம் உங்கள் ஆசிதான் அண்ணு"

"அண்ணன்!.....................விநோதமான உலகம். நீ என்னை அண்ணன் என்கிருய்.... நானும் உன்னிடம் தங்கை என்றே அன்பு செலுத்துகிறேன். ஆனல் உலகம்?.... ...ஒரு ஆணும்—பெண்ணும் நெருங்கிப் பழகினல் 'காதல்' என்பதைத்தவிர வேறு அர்த்தமே இல்லையா?........ என்ருல்.........உனக்குக்கூட அவக்கேடு!"

"அப்படிச்சொல்லாதீர்கள்அண்ணு! உலகம் எதைவேண்டுமானலும் சொல்லிவிட்டுப் போகட்டும். அதைப்பற்றி நான் கவலைப்பட போவதில்லை. என்னிடம் நடிப்புத் திறமை இருப்பதாக புகழ் பாடுகிறதே இந்த உலகம் ........அன்று நான் பசியால் துடித்தபோது என்னைப்பற்றி கவலைப்பட்டதா? என்னிடம் சொந்தத்தங்கைபோல் அன்பைவாரிவீசினீர்கள்.. .........உங்கள் அன்பிலே வளர்ந்தேன். நான் நாடகக்காரி என்ருல் அவளுக்கு இதயமே இருக்கக்கூடாதா? அண்ணு! நம்— அன்பு தூய்மையானது....என்பது நம்இதயத்திற்குத் தெரியும்....ஊரும் உலகமும் எதை வேண்டுமானலும் சொல்லிவிட்டுப் போகட்டும்."

"அழாதே.. சே சே... இதென்ன சிறு குழந்தை மாதிரி... யார் எதைச்சொன்னல் என்ன .. நீ என் தங்கைதான்!... உன் கண்ணடிக் கன்னத்தில் உருண்டோடுகிறதே.... கண்ணீர் ... அதிலிருக்கும் தூய்மை ....... நம்மைக் குறைகூறுபவர்களின் இதயத்தில் நிச்சயமாய் இருக்க முடியாது ... . ."

"அண்ணு!" ஒரு விம்மல்ஒலி கேட்டது. என் கண்களிலும் கண்ணீர் நிறைந்தது. வந்த சுவடே தெரியாமல் திரும்பி நடந்தேன்.

"அந்த நாடகக்காரியிடம் இருக்கும் நல்' இதயம் என்னை சிலிர்க்கவைத்தது!"

அன்பு! விசித்திரமான சக்தி!
அதை உலகம் தெரிந்துகொள்ளாததால்' தான் அன்பு அலறுகிறது!

★

# வீழ்ந்த காதல்

அரசகுடி S. K. பெருமாள்.

டிங்.. டாங் டஹர். .டஹர் என்ற சப்தத்துடன் சென்னை பச்சையப்பன் கல்லூரியின் மணி சுமார் நாலரை மணிக்கு ஒலித்தவுடன் சாரி சாரியாக மாணவர்களும், மாணவிகளும் வாயிற்படியை தாண்டிக் கொண்டு வந்தார்கள். அந்த மாணவர்களின் கூடடத்திலே சேகர் பேசிக்கொண்டு வந்தாலும், அவன் மனம் மட்டும் காலையில் நடந்த சம்பவம் ஒன்றைப்பற்றி சிந்தித்துக்கொண்டு வந்தது.

காலை சுமார் ஒன்பதரைமணி இருக்கும் கடைசி காலச் சம்பளம் கட்டுவதற்காக ரூபாய் ஐம்பதை மணிபர்சில் வைத்துக்கொண்டு டவுன் பஸ்ஸிற்காக பாரீஸ் கார்னரில் சேகர் காத்திருந்தான். பஸ் வந்தது. வழக்கம்போல் எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு பஸ்ஸில் இடம் பெறுவதற்கான முயற்சி செய்துகொண்டு இருந்தார்கள். சேகரும் அவர்களுடன் சேர்ந்து முயன்று பஸ்ஸில் ஒரு இடத்தைப்பிடித்து உட்காரப்போகும் போது, பெண்கள் உட்காரும் இடத்திலிருந்து ஒரு பெண், "பை!...... .பணம்!. ....... .. பிக்பாக்கெட்!" என்று கத்தினள். சேகர் உடனே அவள் கைகாட்டிய திக்கை நோக்கும்போது தனக்குப் பின்புறமிருந்து ஒருவன் தன் மணிபர்சை எடுக்க முயற்சிசெய்து கொண்டிருந்ததைப் பார்த்து, அவனுடைய கையை 'லபக்' என்று பிடித்துக்கொண்டான். பிறகு அவனை கண்டக்டரிடம் சொல்லி போலீஸிடம் ஒப்படைக்கச்செய்துவிட்டு, தன் பணத்தைக் காப்பாற்றிய அந்தப்பெண்ணை நன்றியுடன் பார்த்தான். அவளுடைய வாளிப்பான உடல் அமைப்பும், அழகிய முக வெட்டும், சிவந்த மேனியில் கறுப்புப்புடவையும், அதற்கு அமைந்தாற்போல் துல்லியமான வெள்ளை ஜாக்கெட்டும், சேகரின் உள்ளத்தைக் கவரச்செய்தன. இருவர் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்தன. என்ன பேசுவது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த சேகர் "தாங்ஸ்" என்ருன். அவள் பதிலுக்கு வெற்றிப் புன்னகை பூத்தாள்.

ஒருநாள் மாலை, சேகர் ஒரு பூங்காவில் "கண்டதும் காதல்" என்ற புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு அங்கு போடப்பட்ட சிமெண்ட் நாற்காலியில் உட்கார்ந்தான். அப்பொழுது பின்புறம் இருந்து கலகலவென சிரித்துக்கொண்டு இருபெண்கள் தன்னை நோக்கி வருவதைக்கண்டான். அவர்களில் அன்று பஸ்ஸில் சந்தித்த அந்தப் பெண் இருந்தாள். அவள் அருகில் வந்து "ஸார் ...இந்தப்புத்தகம் டால்ஸ்டாய் எழுதியது என்று இவள் சொல்லுகிருள்! நான் ஷேக்ஸ்பியர் எழுதியது என்று சொல்லுகிறேன், யார் சொல்லுவது சரி"....என்ருள்

"நீங்கள் இருவர் சொல்லுவதும் சரியல்ல, இது நான் எழுதிய புத்தகம்" என்ருன்.

"தாங்கள் எழுதியதா!" இது அவளின் ஆச்சரிய வினு.

"ஏன்? படித்துக்கொண்டிருந்தால் எழுதக்கூடாதா"

"இல்லை....இந்தப் புத்தகத்தைத் தயவு செய்து கொடுங்கள். படித்துவிட்டு இதே இடத்தில் நாளை கொண்டுவந்து தருகிறேன்" என்ருள் அவள்.

புத்தகத்தைக் கொடுத்துக்கொண்டே "தங்கள் பெயர்...."

"நளினி. .."

"அழகான பெயர்........ம்........என் பெயர் சேகர்" என்ருன். பிறகு பெண்கள் இருவரும் சேகரும் பிரிந்தார்கள். அதுமுதல் இருவரும் பூங்காவில் சந்தித்து, பேசி மகிழ்ந்தார்கள். நாள் தவறினலும் சேகரும் நளினியும சந்திக்கத்தவறமாட்டார்கள். சுருங்கக்கூறினல் காதலித்தார்கள்.

சேகர் கல்லூரி விடுமுறையில் தன் சொந்த ஊராகிய செங்கல்பட்டிற்கு புறப்பட்டுக்கொண்டிருந்தான்.

"அத்தான்! என் சிநேகிதி ஒருத்திக்கு செங்கல் பட்டில் திருமணம் நடக்கப்போகிறதாம். நேற்று முன் தினம்தான் நிச்சயதார்த்தம் ஆனதாம். அதற்கு வந்தால் உங்களைச் சந்திக்கமுடிமா? உங்கள் முகவரியைக் கொடுங்கள்" என்ருள் நளினி.

"எதற்கு முகவரி? அந்தத் திருமணத்திற்குள் ஒரு நல்ல முடிவுடன் உன்னை வந்து சந்திக்கிறேன் கண்ணே!"

"நீங்கள் வேறு குலம், நான் வேறு குலம். நம் திருமணத்திற்கு உங்கள் பெற்ரேர்கள் சம்மதிப்பார்களா அத்தான்?"

"என் பெற்ரேர்கள் என்வார்த்தையைத் தட்டமாட்டார்கள். என் இன்பமே அவர்கள் இன்பமாகக் கருதுவார்கள். சந்தேகப்படாதே!. . . வரட்டுமா என்ருன். கண்களில் நீர்ததும்ப. பிறகு இரண்டுகால் வானம்பாடிகளும் வருங்காலத்தை நினைத்தபடியே பிரிந்து சென்றன.

"ஆமா, அடுத்தவாரமே கல்யாணத்திற்கு ஏற்பாடு செஞ்சுருக்கிறேன். கல்யாணத்திற்குச் சம்மதிக்கலே... ...! எங்கேயாவது தூக்குப்போட்டுகிட்டு சாகப்போகிறேன்! மானமில்லபோவுது எவளையோ கல்யாணம் பண்ணிக்குவானும்ல. மாணிக்கமுதலியார் மகள் லலிதாவைவிடப் பெரிய ரதில்ல இவனுக்குக் கிடைக்கப்போரு என்று சொல்லிக் கொண்டே கல்யாண ஏற்பாடுகளைக் கவனித்தார் அவனுடைய தந்தை.

இதையனைத்தும்கேட்டுக்கொண்டிருந்த சேகரின் உள்ளம் கடல் அலையில் அகப்பட்ட துரும்பைப்போல தத்தளித்தது. பெற்ரேர்களின் பாசம் ஒருபுறம், காதலியின் கண்ணீர் ஒருபுறம் இவைகளை எண்ணி எண்ணி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான் சேகர்.

சேகரின் வீட்டிலே திருமண வேலைகள் விரைவாக நடந்துகொண்டிருந்தன. ஒரு பக்கம பந்தல் போடுவதற்கான திட்டமும், மறு பக்கம வெற்றிலை, இலை, காய்கறி வாங்குவதற்கானபட்டியலும் தயார்செய்துகொண்டு இருந்தார்கள் இவைகளின் நடுவே சேகர் தன் திருமணத்தை நளினிக்கு தெரியப்படுத்துவதா? அல்லது தானே சென்னைக்கு ஓடிவிடுவதா? என்ற சிந்தனையில் இருந்தான். அப்பொழுது பெண்வீட்டார் தங்குவதற்காக மாடியிலுள்ள அறையைக் காலி செய்துகொண்டிருந்தார் சேகரின் தந்தை.

மறுநாள் பெண் வீட்டார்கள் வந்து இறங்கி மாடியிலேயே போய் தங்கினுர்கள். திருமணத்திற்கு போவதற்காகமாடியிலுள்ள தன் அறைக்குப் புத்தகம் எடுக்கச்சென்ருன். அங்கே அவன் அறையில் கண்ட காட்சி; பிரமிக்கச்செய்தது. அவன் ஆருயிர் காதலி நளினி, சேகரின் புகைப்படத்தைப் பார்த்தபடி கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள். சேகர் உணர்ச்சி ததும்பியவனுய் "நளினி" என்று கத்திவிட்டான்.

"நீ எப்படி இங்கு வந்தாய்?"

அத்தான்! முன்புஒருநாள் கூறினேனே நினைவு இருக்கிறதா? என் சிநேகிதி ஒருத்திக்கு நிச்சயார்த்தமென்று. அனல் மாப்பிள்ளை யார் என்று இங்கு வந்த பிறகுதான் தெரிந்துகொண்டேன். மணமக்களுக்கு வாழ்த்துக்கூறலாமென இன்னும் இங்கே இருக்கிறேன். அவன்கண்கள் கலங்கின. அன்று இரவு தொலைந்தால் அவர்களுடைய காதல் ஆறிப்போன பழங்கஞ்சிதான். இருவரும் ஒருமுடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவு நள்ளிரவிலேயே அவர்கள் தஞ்சைக்கு வந்து சேர்ந்தார்கள். கல்யாணம் ஏமாற்றத்தில் முடிந்தது

தஞ்சை வந்து சேர்ந்த காதலர்கள் சிறு வீடு வாடகைக்கு எடுத்துக்கொண்டு சந்தோஷத்துடன் காலத்தைக் கழித்தார்கள். கையிலே கொண்டுவந்த பணம் கரைந்து கொண்டே வந்தது. சேகர் வேலை தேட ஆரம்பித்தான். தஞ்சாவூர் என்ன பெரிய பட்டினமா? உடனே வேலை கிடைக்க. சில வாரங்கள் உருண்டோடின. ஒரு பத்திரிக்கை காரியாலயத்தில் சேர்ந்து சேகர் பணியாற்றினுன்.

காலம் கடந்து சென்றது. சொற்ப வருவாயிலே காதலர்கள் இருவரும் வாழ்வது



[24-ம் பக்கம் பார்க்க]

சென்ற இதழ் தொடர்ச்சி

# ★ அமைதி ★

புலவர் தில்லை-முத்து. சம்பந்தன்.

★

காட்சி 3.

இடம் - போர்க்களம்.

உறுப்பினர்கள்.- ஔவையார், பகையரசர்கள்.

ஔவை.- அரசர்களே! உங்கள் ஆருயிர் மீது ஆசை இல்லையா உங்களுக்கு. மீண்டும் மீண்டும் ஏன் வருகின்றீர்கள். உங்களைப் பார்த்த கண்களோடும் தன் மகனைப் பார்த்தான். பெற்ற பிள்ளையை உற்றுப் பார்த்தும் சற்றும் அவன் விழிகளில் சிவப்புத்தன்மை மாறிற்றில்லை. கூறுகிறேன் இன்னும் கேளும்! மாறுகொண்ட மன்னர்களே! வீறுபெற்ற அதியனின் வீரக்கழல் காலில் உள்ளது. கைக்கொண்ட வேல் மெய்க்கொண்ட கவசம் இவற்றை இன்னும் களைந்திலன். மான் கூட்டம் நிற்குமோ? மறப் புலி எதிர்த்தால். யான்கூறும் இம் மொழிகேட்டு இவ்விடத்தைவிட்டு ஏகிடுக!

படையெடுத்து வந்த மன்னர் தடைசெய்யும் அம்மொழியால் உடைவுற்ற மனத்தோடு நடைபோடடுச் சென்றூர்கள்.

காட்சி 4.

இடம்:- காஞ்சிரம் தொண்டைமான் இளந்திரையனின் அரண்மனை.

உறுப்பினர் - தொண்டைமான், இளந்திரையன், சிற்றரசர் மூவர்.

தொண்.- சிற்றரசர்காள்! நீங்கள் உற்ற குறையாதோ?

முதல்வர் - இற்றைநாள்வரையில்ஏதும்குறையின்றி வாழ்ந்தோம். இடுக்கண் என்னும் இடுக்கியில் அகப்பட்டு இடர்ப்படுகின்றோம்

இரண்டா:-பெரும்படை அழிந்தோம். வருந் தடை நீக்கும் வழியறியோம்.

தொண்.- காரணம்?

மூன்றும:- தகடூரின் தலைவன். கொல்லிமலைச் செல்வன் அதியனால் ஏற்பட்டது இந்த அவதி.

முதல்வர்:- ஆமாம். ஆமாம். அவன் அழிய வேண்டும்.

இரண்டா:-அதற்குத் தங்கள் ஆதரவு வேண்டும்?

மூன்றும:- தங்கள் கடன் அடியவரைக் காத்தலேயாம்.

தொண்:- அதியனைப்பற்றி எனக்கும் அதிகமாகத்தெரியும். வெல்லக் கருதி நான் நல்லதோர் சூழ்நிலையை நாடி இருக்கின்றேன் காலமும் அதற்குத் துணைபுரிய வேண்டும். கவலைகொள்ளாதீர்கள். கவனித்துக்கொள்ளுகிறேன்.

முதல்வர் - எங்கள் உரிமை தங்கள் கையில் தான் இருக்கிறது.

இரண்டா:-அடைப்பட்ட வெள்ளம் மடை திறந்தாற்போல் செல்லும் படையுண்டேல் எங்கள் கவலைதொலைந்தது.

மூன்றும:- நாங்கள் சென்று வருகின்றோம். அரசே!

மூவரும் சென்றனர். தொண்டைமான படைதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டான். அதனை அதியனின் ஒற்றன் அறிந்தான் தகடூர் நோககிச சென்றுன.

தொண்.- இருக்கட்டும். என்னால் ஆனதை செய்கிறேன்.எண்ணிறந்த படைக் கருவிகள் கண்ணிறையும் காட்சியாக படைக்கலக் கொட்டிலின் உண்ணிறை வைத்திருக்கிறேன. படைபலம் உள்ளது அதியனின் தடைகடக்க அரிதோ?

காட்சி 5.

இடம்:- தகடூர் அரண்மனை.

உறுப்பினர்-- ஒற்றன், அதியமான், ஔவையார்

ஒற்றன்.- அரசே! இளந்திரையர் நம்மீது உளங்கொண்டார் படையெடுக்க

அதியன்.- நம்மீதா?

ஒற்றன்.- ஆம் அரசே! ஊம் என்று சொன்

ஞல் அவர் படைகள் உறுமி எழும் போலும். படைககலக் கொட்டில் நிறைய படைக்கருவிகள் வைத்திருக்கின்ருர். விரைவில் படை எடுக்கக்காலம்கருதி இருக்கின்ருர்.

அதியன்:- போர் இன்றி அமைதியாகப்போக்குகின்ருர் பொழுதை நம்மறவர்கள். இக்காலந்தான் அவனுக்குத் தக்க காலமோ? மக்கள் நலம் பேணு மன்னனே?

ஒற்றன்:- செய்ய வேண்டியதைச்சொல்லுங்கள்.

அதியன்:- புதுமுறையில் தோன்றிய குறுநில புரவலன் அவன். அறிவுடையான். ஆண்மையுடையான். நூற்புலமையும் நுணங்கிய கேள்வியும் உடையான். பகைவரைப் பணிய வைத்தத் தகையுடையான். அவனே நம்முடன் மாறுபடுகின்ருன்.

ஔவை:- என்ன சொல்லுகிருய் அதியா? போர் என்ருல் பூரிக்கும் தோளுடையான் நீ. மானம் ஒன்றே நல்வாழ்வென வாழும் மறவர் குல மாணிக்கம் நீ. மாற்ருரைப் புறங்கண்ட மாவீரன் நீ. போர்களத்தே சிரிக்கின்ற புனைகழலான் நீ. அஞ்சலாமா?

அதியன்:- அஞ்சவில்லை அம்மையே அஞ்சவில்லை. நாம் என்ன பஞ்சைகளா? இல்லை வஞ்சனை செய்பவர்களா? மறவர் அனைவரும் திறமையுள்ளவர். எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை மக்களின் அமைதியைக் குலைக்க மனமில்லை எனக்கு. ஏதுமறியா குடிமக்களும் இன்னலுறுவரே என்றுதான் எண்ணுகிறேன்.

ஔவை:- இப்பொழுது என்ன செய்வதாக எண்ணம்?

அதியன்:- போர் வராது தடுத்தல் வேண்டும். தொண்டைமானிடம் நீங்கள் தூது சென்று வருதல் வேண்டும்.

ஔவை:- சரி அதியா! உன் அன்புக் கட்டளையை நிறைவேற்றுகின்றேன்.

காஞ்சிபுரம் செல்லுகின்ருர் ஔவையார், தொண்டைமானிடம தூதின் பொருட்டு.

## காட்சி 6.

இடம்:- காஞ்சிபுர அரண்மனை.

உறுப்பினர்:-தொண்டைமான், இளந்திரையன், ஔவையார்.

தொண்:- (பெண் மூதாட்டி ஔவையார் தன் அரண்மனைக்குள் வருவதைக் கண்ட தொண்டைமான்) வருக! வருக! ஔவையே வருக!

ஔவை:- நலந்தானே.

தொண்:- தங்கள் ஆசி! நாங்கள் நலமே அமருங்கள்.

ஔவை:- (உட்கார்ந்து கொண்டே) நல்லது மன்னவா!

தொண்:- வெகுதூரம் நடந்து வந்தீர்போலும் மிகுதியான களைப்பு மேலிட்டிருக்கிறதே. வாருங்கள் உணவுஉண்டபின் பேசிக்கொள்வோமே.

ஔவை:- சரி.

ஔவையின் வருகையால் அளவற்ற மகிழவு கொணட அவன அவாக்கு அறுசுவையுண்டி அளிக்கின்ருன். அவரும் உணகினரா உணடபின.

தொண்:- இவ்வளவு தூரம் தாங்கள் ஏனோ வந்தீர்?

ஔவை:- எல்லாம் நாட்டின் நலம்கருதிதான்,

தொண்:- இவ்வரண்மனைக்குப் புதியவர் ஆதலின் ஒவ்வொரு பகுதியாக இதனைப் பார்வையிடலாமே!

அரணமனையைச சுறறிப பார்ததுக்கொண்டு வருங்கால் படைக்கலக்கொட்டிலுக்கு அழைததுச செல்கின்ருன், படைக்கலக் கொட்டிலைப் பார்த்துத் தனது படை பலததைப் பார்த்துக் கொளளட்டும் என்று.

தொண்:- இதுதான் என்னுடை படைக்கலக் கொட்டில் (ஆயுதச்சாலை)

ஔவை:- அப்படியா! கண்காட்சிசாலை போன்று காட்சி அளிக்கிறதே! மாட்சியுறுவேல்கள், மயில்தோகை அணியப்பெற்றிருக்கின்றன. மாலை சுற்றப்பெற்றிருக்கின்றன.

பிடியின் அழகுபிடித்திருக்கின்றது. நெய்யும் பூசப்பெற்றிருக்கிறது. காவல் சூழ் கோவிலில் உள்ளே வைக்கப்பெற்றும் உள்ளது.

தொண்:- அதிகமானின் வேல் அம்புகள்... !

ஔவை:- அவன் ஒருவம்புக்காரன். எதிர்ப் போரின் தெம்பு ஒடுக்குபவன். நம்புவோர்க்கு நலம் கொடுப்ப வன். பொழுது விடிந்து பொழுது போனல் போர் போர் போர் என் பான் ......... ...

தொண்.- (இடைமறித்து) அதனல்

ஔவை- அம்பும் அழிந்தன கூர்மை, பகைவரின் மார்பில் பட்டமையால், அரண்மனேயில் அவைகளில்லே. பரண்அமைந்த கொல்லன் உலேக் கூடத்தில் உள்ளன; முரண்வரின் முன்னழிக்கும் கூர்மை பெற;உன் படைக்கலம் இங்கே. அவன் படைக் கலம்அங்கே. சீரோடு இருப்பவை இவை. செம்மைபெறச் செல்பவை அவை. உன் தன்மை அவனுக்கு வருமா?

தொண் - உண்மைதான். என் பெருமை அவனுக்கு வராது தான். நான் அழகு செய்யப்பட்ட அம்பு வேல் உடையேன்.காரணம் போர்க்களத்தில் அவைகளேப் பயன் படுத்தாததால். பழுது பார்க்கப்படுகின்றன

"இனிப் பொதுக்கூட்டங்களில் தமிழர்கள் தாய்மொழியிலேயே பேசுதல் வேண்டும். அயல்மொழியில் பேசுதல் கூடாது. எவரேனும் அயல் மொழியில் பேசப்புகுந்தால் அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்றல் வேண்டும்.

திரு. வி. க.

21-4-1918ல் தஞ்சையில் நடந்த மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு

"ஒருபக்கத்தில் வேற்றுமை ஒழிந்து ஒற்றுமை நிலேப்பதற்காக நாம் பாடுபடல் வேண்டும், மற்றெரு புறத்தில் அதிகாரவர்க்கத்தைஎதிர்த்தும் போராடி வரல்வேண்டும்."

* * *

"அடக்கம் எனது உடைமை
அடிமை எனது பகைமை"

திரு. வி. க.

அதியனின் படைக்கருவிகள் காரணம் போரையே பொழுது போக காகக்கொண்டதால். அவனே எதிர்க்க விரும்பினேன். இரு புலி மோதின் காடதிரும் அதுபோல் நானும் அவனும் போர் செய்யின் நாடுவாழ் மக்கள் நலிவெய்துவர். பொறுமையால் பொல்லாதார் உரைகளேக்கேட்டேன். அறிவு கெட்டேன். நல்லுரைதந்தீர் நீவிர்.

ஔவை:- நான் என்ன சொல்லிவிட்டேன்?

தொண் - உண்மையைச் சொல்லி உயர்த்துவதுபோல் என்னேத்தாழ்த்தினீர். திருத்தினீர். அவனேத்தாழ்த்துவதுபோல உயர்த்தினீர், நல்வழி சொல்லுங்கள். நடக்கிறேன்.அதன் படி.

ஔவை:- அமைதியை விரும்பியே அனுப்பினன் அதியன் என்னே.வந்தேன் அதுவேண்டி உன்னே.

தொண்:- போர்செய்யும் எண்ணம் போயது புலவரே. போய்ச் சொல்லுங்கள்; எனக்கும் அமைதி, அதியனுக்கும் அமைதி, நாடுவாழ் மக்கள் அனேவர்க்கும் அமைதி என்று.

ஔவை:- அதுபோதும். வாழ்க நின் கொற்றம்! வளர்க நம் நாடு! வருகின்றேன் சென்று யான். ★

12-ம் பக்கத்தொடர்ச்சி

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த கவிமணிக்கு மனம் பொறுக்கவில்லை. மக்களின் அறிவில்லாத்தன்மையை எண்ணி அகம் நொந்தார். ஆண்டவன்பேரால் இழைக்கப்படும் அநீதியை விலக்கவேண்டுவது தம் கடமையென உணர்ந்தார். கூட்டத்தில் புகுந்து "ஆட்டைப் பலி செய்வது அநீதி; ஆண்டவனுக்குப்பொறுக்காதசெயல்; அனைத்துயிரும் அவன் படைப்பே; ஆகவே இந்த ஏழை உயிரைக் கொல்லாதுவிட்டுவிடுங்கள்" என்று வேண்டினர்.

★


உரிமை முழக்கம்

மாதப்பத்திரிகை.

சந்தா விபரம்.

ஆண்டு சந்தா மலருடன் } 4—0—0

தனி இதழ் .... .... 0—4—0

அலுவலகம்:

29, வாண்டையார் காலனி,

புஷ்பவநகர், ஸ்ரீநிவாசபுரம்,

தஞ்சாவூர்.


20-ம் பக்கத் தொடர்ச்சி

மிகவும் கடினமாக இருந்தது. இந்தநிலையில் சேகர் தன் பெற்றோர்களை நினைத்து, நினைத்து வருந்திக்கொண்டிருந்தான். வறுமை ஒரு பக்கம், வேலை ஒரு பக்கம், சேகரை படுத்தப் படுக்கையாக்கிவிட்டது. நளினி கவலையே உருவெடுத்தாற்போல் அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தாள். தன் நகைநட்டுகளை விற்று டாக்டரை அழைத்து வந்து காண்பித்தாள். சேகரைப்பார்த்த டாக்டர் "க்ஷயரோகம்" என்ற நோய் இருப்பதாகக் கூறினர். இந்த நோய் பணம் இருப்பவரிடம் வரவேண்டிய நோய் அல்லவா? என்ன செய்வார்கள்? நளினி செய்வது அறியாமல் கலங்கினள். நாட்கள் நகர்ந்தன. சேகரின் நிலை பரிதாபகரமாக மாறியது. உடனே நளினி, தர்மலிங்கமுதலியார்க்கும், லலிதாவிற்கும் தந்தி கொடுத்தாள்.

தந்தியைப்பார்த்த லலிதா தன்சொந்தக் காரில் தர்மலிங்க முதலியாரையும் அழைத்துக்கொண்டு தஞ்சைநோக்கி வந்தாள். சேகர் மரணத்தருவாயில் நளினி! நளினி! என்று புலம்பிக்கொண்டிருந்தான். இவற்றைக் காணச்சகியாத நளினி பயத்துடன் தன்னை அறியாமல், டாக்டரை அழைக்க ஓடினள்.

காரை ஓட்டிவந்த லலிதா எதிரே ஓடிவரும் நளினியைப்பார்த்து, "சேகரைப் பறித்துக்கொண்டு வந்தவள் அவரையும் விட்டுவிட்டு எங்கோ ஓடப்பார்க்கிருள்" என்ற தவருனகருத்துடன் தன்காரை அவள் மேல் மோதினள். ஆம்! லலிதா பழிக்குப்பழி வாங்கி தன் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டாள். "சேகர்" என்று கத்திய நளினியை, மரணம் அணைத்துக்கொண்டது. காரைவிட்டு கீழே இறங்கிய தர்மலிங்க முதலியார் லலிதாவின் மூலம் நளினி என்று அறிந்து, அவளை காரில்போட்டுக்கொண்டு சேகரின் இல்லத்தை நோக்கிச்சென்ருர்.

நளினியை இரத்தவெள்ளத்துடன் தூக்கிக்கொண்டுவந்த தன் தந்தையைப் பார்த்து, "நளினி" என்று கத்தியவாறே கட்டிலிலிருந்து எழுந்தான் சேகர்! ஆம்! சேகர் நளினி இருக்கும் இடத்தைத்தேடிச் சென்றுவிட்டான்.

சேகரைப்பார்த்து புலம்பிக்கொண்டு இருந்த தர்மலிங்கமுதலியாரின் பின்புறமிருந்து டக்....டக் என்ற சப்தத்துடன் போலீஸ்காரர்கள் நுழைந்து தர்மலிங்க முதலியாரையும், லலிதாவையும் கைதுசெய்து அழைத்துச்சென்ருர்கள்.

★

# அந்தச்சிலை!

திருமாவளவன்

சிற்பி சின்னையனை சேரபுர வட்டாரத்தில் அறியாதவர் கிடையாது. அவ்வளவு பேரும் புகழும் பெற்றவன் அவன். அதற்குக் காரணம் அவன் சிறந்த சிற்பி என்பதுமட்டுமல்ல, அவன் மாபெரும் ஓவியனுங்கூட. அப்பொழுது சேரபுரம் குறுநில மன்னன் சென்னியப்பர். அவர் சிறந்த அறிவும் அழகும் பெற்றவர். புலவர்களையும் கலைவல்லுநர்களையும் ஆதரித்துப்போற்றியவர். எனவே சின்னையனும் மன்னனது மதிப்பிற்குரியவர்களில் ஒருவனானதில் வியப்பில்லை!

சிற்பியின் உளிச்சத்தம் "லொட் லொட்" என்று ஒலித்துக்கொண்டிருந்தது. அவன் மும்முரமாக ஒருசிலையைச் செதுக்கிக்கொண்டிருந்தான். "ஐயா!" என்றகுரல் அவனை அந்தச் சிற்பத்தை அரைகுறையாக வைத்துவிட்டு வெளியே வரச்செய்தது. ஆள் மன்னர் சென்னியப்பரிடமிருந்து வந்திருந்தான். அரசர் சிற்பியைக்கையோடு அழைத்துவரும்படிச் சொன்னதாக அவன் தகவல் தந்தான், சின்னையனும் சட்டையையும் மேல்துண்டையும் எடுத்துப்போட்டுக்கொண்டு மன்னரது மாளிகை நோக்கிப்புறப்பட்டான்.

"சின்னையா!" "அரசே" "உன் சிற்பங்களும் ஓவியங்களும் என்னை மிகவும்கவர்ந்துவிட்டன. அவ்வப்போது சிறந்தவற்றைக் கொண்டு வருகிறாயே ஒழிய உன் தொழிற்கூடத்துக்கு என்னை அழைக்க மறந்துவிட்டாயே!" "அப்படி ஒன்றுமில்லை அரசே! தாங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஏழையின் இருப் பிடத்திற்கு எழுந்தருளலாம்" "சரி. நாளை மறுநாள் நான் அங்கு வருகிறேன்!" "மகிழ்ச்சி! மன்னவா" சென்னியப்பரின் கையிலிருந்து ஒரு முத்துமாலை சின்னையனின் கைக்கு மாறியது.

அரசன் குறித்த நாள் வந்தது. சிற்பி தான் செதுக்கிக்கொண்டிருந்த அந்தச்சிலைக்குக் கண் திறந்துகொண்டிருந்தான். ஒரு ஆள் வந்து மன்னரின் வரவு தெரிவித்தான் சிற்பி ஓடோடியும் வந்து வரவேற்றான்; சென்னியப்பருக்குத் தன் தொழிற்கூடத்தைச் சுற்றிக் காணபித்தான். அரசன் அங்கிருந்த ஓவியங்களையும், சிற்பங்களையும் பார்த்து மகிழ்ச்சியில் திளைக்கலானான. சிற்பி தான் செதுக்கிக் கொண்டிருந்த சிலையிடம் மன்னனை அழைத்துச்சென்றான். அரசன் அந்தச்சிலையை வைத்தகண் வாங்காமல் பார்த்தான். அவன் முகம் மாறுபட்டது; மீசை துடித்து, கண்கள் சிவந்தன. அவனதுமடித்தஉதடுகளிலிருந்து வார்த்தைகள் வேகமாக வெடித்தன "சின்னையா! நான் வருகிறேன்;" சிற்பி வெளியே ஓடிவந்தான். கொற்றவனின் தேர் வெகு தூரம் சென்றுவிட்டது.

சிற்பிக்கு வேந்தனின் சினத்திற்குக் காரணம் புரியவில்லை. அவனது மூளை குழம்பியது. அவனுக்கு இனந்தெரியாத பயம். அந்தச் சிலையையே வெறிக்கப்பார்த்தான். "ஐயா" அவன் சிந்தனை கலைந்தது. உங்களை அரசர் கையோடு கூட்டி வரச்சொன்னார்!"

"சின்னையன்! அந்தச்சிலை எந்தப் பெண்ணின் சிலை?" அரசனின் வினாவில் சந்தேகப் பாம்பு நெளிந்தது. "என் காதலியின் சிலை!" "என்ன சொன்னாய்?" பளீரென்று ஒருஅறை சிற்பியின் கன்னத்தில் விழுந்தது. சின்னையன் மூர்ச்சையாகிக் கீழேவிழுந்தான். "இவனைத் தூக்கிச்சென்று அந்தச் சிலையின் காலடியிலேயேசிரச்சேதம்செய்துவிடுங்கள்!"

மன்னன் கட்டளை நிறைவேறியது. அவன் காதலி வந்தாள் மன்னனைக் கண்டாள். அவள் கையிலே சிற்பியின் குருதி தோய்ந்த சிலை! கொற்றவன் அவள் மாற்றம் கேட்டான். மருண்டான்! "அம்மா! என் மனைவியை உரித்துவைத்தாற்போல நீ இருப்பதுதான் நீ செய்த குற்றம். உன் காதலன் செதுக்கிய சிலை என் மனைவியின் சிலைதான் என்ற எண்ணத்தில் உன் காதலனை.........." அரசன் பேசிக்கொண்டே போனான். அப பெண் மடக்கொடி அங்கிருந்தால்தானே.

# புலவர் பெருமை

சாலியமங்கலம் "சுப்பு"

"கழைதின்யானையார்" என்னும் புலவர் பெருமகனுர் ஓரியின் நாட்டில் வாழ்ந்து வந்தார்; சிறந்த அறிவு, ஒழுக்கங்கள் நிரம்பியவர்; இப்புலவர் தன் மனைவி, மக்களுடன் இல்லறச்சகடத்தை இனிதே செலுத்தி வந்தார். இல்லறச்சகடம்வறுமையால் தடைப்பட்டது. வறுமை யென்ருல் சொல்லுந்திறத்ததன்று.

"பசிவந்திடப் பத்தும் பறந்து போம்" என்ற உலக வழக்கிற்கியைய, புலவர் பெருமானின் கொள்கையும் தளர்வதாயிற்று; தளர்ந்து பரிசில்வேண்ட மனம் விரும்பியது; (இவ்விதிக்கு புலவர் மட்டிலும் விதிவிலக்கா என்ன? ) எவரிடமாவது சென்று பரிசில் பெற்று வரலாம் என்ற எண்ணத்துடன் வீட்டை விட்டுப்புறப்பட்டார்,

அந்நாளிலே புலவர்களைப் புரக்கும் புரவலர்களில் தலை சிறந்தவனுக விளங்கியவன் கடையெழு வள்ளல்களில் ஒருவனுய "ஓரி" யென்பவனேயாவான்; அவன் தம்மை விரும்பிப் பரிசில் வேண்டி வந்த புலவர்களுக்கு வரையாது கொடுக்கும் வன்மையுடையவன்; சிறந்த வீரன்; இவனின் அரண்மனையை புலவர்களும், பாணர்களும்தான் குறுக முடியும்; பகைவர்களால் அனுகமுடியாதென்ருல், ஓரியினது வீரத்தையும், கொடைவன்மையும் கூறவும் வேண்டுமோ? இத்துணையளவு சிறப்புக்களைப் பொருந்திய ஓரியிடத்து வந்தார் நம் புலவர். வந்த புலவரை நன்கு வரவேற்று ஆசனம் அளித்தான் ஓரி. பிறகு செய்யவேண்டிய சிறப்புக்களை வரன்முறையாகச் செய்வித்தான். புலவரும் இச்சிறப்புக்களில் மூழ்கி தம்மையும் தம் நிலைமையையும் மறந்து ஓரியினது அரண்மனையில் தங்கி, மகிழ்ச்சியாகக் காலத்தை கழித்து வந்தார். அவர் தாம் மன்னனிடம் வந்த காரியத்தைக் கூறுவதற்கேற்றதோர் நல்ல வாய்ப்பினை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

சில நாள் கழிந்த பின்னர் புலவர் எதிர்பார்த்த நல்வாய்ப்புக்கிட்டியது. தம் நிலைமையையும், குடும்ப நிலைமையினையும், அரசனிடத்துத் தெளிவாக எடுத்துக்கூறி, வறுமைத் துன்பத்தினின்றும் நீங்கி உய்யப் பரிசில் வேண்டி நின்ருர்.விரைந்துஇல்லிற்குச்செல்ல வேண்டிய இன்றியமையாமையுங் கூறினுர். ஓரியோ, பரிசிலர் பரிசில் கேட்கு முன்னமேயே அவர் முகக் குறிப்பறிந்து வேண்டுவன கொடுக்குந் திறமுடையவன்தான். ஆயினும் யாது காரணத்தாலோ பரிசில் கொடுக்காது இருந்தான், மேலும் பரிசில் புலவர்க்குக் கிடைதுவிடுவன போன்ற செய்கைகளையும் செய்தான். புலவரும் இன்று பரிசில் கிடைக்கும் நாளை பரிசில் கிடைக்கும் என எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தார். சிலநாள் சென்றது, புலவர் மன்னனிடம் மீண்டும் கூறி தம் இல்லத்திற்குச் செல்லவேண்டியதையும் கூறினுர். மன்னனே செவிசாய்த்துக் கேட்டுப் பரிசில் தரவில்லை. சிலநாள் காத்திருந்தும் பரிசில் கிடைக்காததினுலஓரியின்பேரில் புலவர்க்குக்கோபம்பிறந்தது.புலவர் அறிவுடையவராதலின் கோபத்தினுல்மன்னனைப் பழிக்காது, தம்மையும், தாம் புறபபட்டபொழுது ஏற்பட்ட பொழுதையும், புள் நிமித்தத்தையும் பழித்தார். மிகவும்.வருத்தமடைந்தார்.

மேலும்,ஓரிக்குப்பரிசிலரதுதன்மையையும் பகுதியையும் மிகவும் பெருமையாகக கூறினுர். பரிசிலர் ஈவாயாக வென்று கேட்கும் இழிபும் அவர்கள் கொடுக்காததனுல் ஏற்படும் இழி

28-ம் பக்கம் பார்க்க.

---

முன் பக்கத்தொடர்ச்சி

---

சிற்பியின் தலையுடன் அவள்ஓடிக்கொண்டிருந்தாள். "அந்தச்சிலை! அந்தச்சிலை!" அவள் வாய் முணுமுணுத்தது! சிற்பியின் தொழிற்கூடத்தில் 'தொப்' என்ற சத்தம்! ஆ! அம்மா! என்ற முனகல் ஒலி! ஆம்! அந்தத் தொழிற்கூடத்தில் இரண்டு பிணங்கள்! ஒன்று வெட்டுண்ட சிற்பி! மற்ருென்று அவன் காதலி!

★

# மதிப்புரை

மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

---

## "தாயகம்"

(மாதமிருமுறை)

ஆசிரியர் - நல்லுலகசுந்தரம்

கௌரவ ஆசிரியர் - எஸ். வாசுதேவன்

பொங்கல் மலரில் பலஇலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் பல கவிதைகளும் வெளிவந்துள்ளன. டாக்டரின் புராணம் உண்மையிலேயே அறியாமையில் சுழலும் பித்தர்களுக்கு புத்திபுகட்ட உதவும் தாழக்கோல். அனைவரும் படித்து இன்பமடைய வேண்டியுதே வாழிய தமிழ்கூறு நல்லுலகத்துத் தாயகம்.

விலை 2 அணா

அலுவலகம்: செம்பனூர் கோவில்,

H. O. அறந்தாங்கி.

## "தமிழரசுக்கழக தலைவர்களின் வாழ்க்கையிலே...!"

தமிழனென்று .சொல்லடா? தலை நிமிர்ந்து நில்லடா? என்று வீர முழக்கமிட்ட தமிழகத்தான் பிறந்த மண்ணிலே தோன்றிய தலைவர் பலர். அவருள் எல்லை காத்த இனியும் எல்லை காக்கும் இலக்கியத் தென்றல் தமிழன் திரு மா. பொ. சி யும் ஒருவர். இவரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளையுப்பற்றி தனித்தனியே சிறுசிறு கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியர் தன்னையும் சேர்த்து இருபத்தோறுபேர்களின் வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார். கழகத்தொண்டர் சிலரைப்பற்றி எழுதஇயலாது போனமைக்கு ஆசிரியர் காட்டும் வருத்தம் வரவேற்கத்தககதே. தமிழன் என்பார் அனைவர் கையிலும் ஒவ்வொரு ஏடு இருக்க வேண்டியதே.

இந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளசில செய்யுட் தொடர்கள் சரியாகப்படவில்லை, இனி புதிப்பிப்பின்அங்ஙனம்நிகழ்தலின்றிபதிப்பிப்பாராக. வளர்க நும் பணி.

தொகுத்தவர் - என். ஏ. வேலாயுதம்

வெளியீடு:- அன்புநிலையம், அலக்சந்திராரோடு, நாகர்கோவில்.

## "வீரமுழக்கம்"

(தேசீய வார இதழ்)

ஆசிரியர்:- எஸ். என். ஏ. அசீஸ்

காங்கிரசைச் சார்ந்து முழங்கி வரும் ஏடுகளில் இதுவும் ஒன்று. அரசியலுக்கு முதலிடம் தரப்பட்டிருக்கிறது. "வள்ளுவரும் -வள்ளலாரும்" என்றஇலக்கிய ஆய்வு சிறப்பாக உள்ளது. எழுத்துப் பிழைகள் திருத்தம் பெற்றால் சிறப்பாயிருக்கும்.

தனியிதழ் அணா 1 ஆண்டு சந்தா ரூ 3

"வீரமுழக்கம்"

காங்கிரஸ் மாளிகை, சென்னை-6.

## "தஞ்சைமணி"

(மாத மிருமுறை)

ஆசிரியர் - S. கணபதி–குடந்தை.

குடந்தையிலிருந்து வெளிவரும் கட்சிச் சார்பற்ற இதழ். தேர்தலுக்குரிய விளக்கங்கள் பயனுள்ளவை. அரசியல் செய்திகள் பலவரின் பயன்தரும்.

ஆண்டு சந்தா ரூ 5

(தமிழ்நாடு நகராட்சி மலருடன்)

"தஞ்சைமணி"

கும்பகோணம்.

## "கீழ்பவானி விவசாயி"

(வார இதழ்)

ஆசிரியர்:- நல்லசிவன் M. L. A.

உழவரை முன்னேற்ற உழைத்து வரும் சீரிய இதழ். உழுதுண்டு வாழ்பவரும் தொழுதுபின் செல்பவரும் வரவேற்பார்களாக.

விலை அணா. 1. ஆண்டு சந்தா ரூ. 3

## வருந்துகிறோம்.

1—1—57-ல் வடகாலில் நண்பர் சௌந்திரராசன் அவர்கள் அகால மரணம் அடைந்ததைக் கேள்வி யுற்று வருந்துகிறோம்.

ஆசிரியர்.

26-ம் பக்கத்தொடர்ச்சி

பும், கேளாதே கொடுக்கும் உயர்பும் அதனைக் கொள்ளாதுவிடும் உயர்பும் கூறி, பரிசிலர் கட்கு மன்னர்கள் எத்தன்மையரென்பதை யும் சிறந்த உவமையால் விளக்குகிறார். இத் துணையும் மன்னர்க்குக் கூறிப் பின்னர் புல வர்களுக்குப் புரவலர்கள் பரிசில் ஈத்திலரா யின் அதற்காக மன்னர்களைப் பழியாது, புள் ளையும் பொழுதையுமே பழிப்பர் என்னும் சிறந்த புலவர்களின் பெருமை பொருந்திய கொள்கையையும் வலியுறுத்துகின்றார். இக் கருத்தினையுடைய ஓர் பாடல் வழியாக மன் னர்க்கு எடுத்துரைக்கின்றார். அப்பாடல்தான் இது;

"ஈயென இரத்த லிழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெ
கொள்ளேன் என்றல் அதனினும்உயர்ந்தன்று [திர்
தெள்நீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட் டோரே
யரவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கில் அதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர் அதனால்
புலவேன் வாழியர் ஓரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே"

[புறம்-204]

பதவுரை:-

[இழிந்தன்று-இழிந்தது, உயர்ந்தன்று—உயர்ந்தது, மா-யானை, சேறொடு—சேற்றுடன், அதர்—வழி, புலவேன்—கோபிக்கமாட்டேன், கருவி வானம்-மழைபெய்தற்கு வானம்கருவியாதலால் கருவிவானம் என்றார்]

★


வரப்பெற்றோம்:

### ஹோமியோபதி

[ மாத வெளியீடு ]

சுகத்திற்கும், வாழ்க்கைக்கும் ஏற்றது.

விபரங்கட்கு:

நிர்வாக ஆசிரியர்,
ஹோமியோபதி,
ஹோமியோ ஹவுஸ், குடந்தை.

### தஞ்சை வர்த்தக சங்கம்.

தஞ்சாவூர்.

1956 ஆண்டு அறிக்கை &
வரவு செலவு கணக்குகள்.

மதிப்புரையாளர். தஞ்சை வாணன்.


★

## வரவேற்கிறோம்.

உரிமைமுழக்கத்தில் வெளியிட கவிதை, கட்டுரை, சிறுகதை, முதலியனவற்றை வரவேற்கிறோம். கட்டுரை, சிறுகதை "முழக்கத்தில்" இரண்டு பக்கத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டும். போதிய தபால் தலைகள் அனுப்பினால் தான் வெளியிடாதவற்றைத் திருப்பி அனுப்பப்படும்.

ஆசிரியர்.

# ★ பவானி பிஸ்கட்ஸ் ★

★

இனிப்பு, மணம், சத்து இவற்றில் சிறந்தது.
சின்னஞ்சிறு குழந்தைகளின் உடல் உறுதிக்கு ஏற்றது.

★

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

**M. காமாட்சி சேர்வை.**

பவானி பிஸ்கட் கம்பெனி,


சேனியர் தெரு, :: காரைக்குடி.

---

# வி. எம். தேவர் & சன்ஸ்,

## போஸ் கலப்பை ஒர்க்ஸ்,

மேலூர். (மதுரை ஜில்லா)
(சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது)




விலை விபரம்.

நெ. 33. கலப்பை செட் 1-க்கு ரு. 8—2—0

நெ. 33. தனிக்கொழு 1-க்கு ரு. 2—8—0

நெ. 3. கலப்பைசெட் 1-க்கு ரு. 6—14—0

நெ. 3. தனிக்கொழு 1-க்கு ரூ. 2—2—0

ரயில் சார்ஜ், பாக்கிங் சார்ஜ், இதர செலவு தனி.

படித்தீர்களா?

இதோ!

# "உரிமை முழக்கம்"

★

காவியத்தின் சிறப்பு.

கன்னித்தமிழின் கவிநடனம்;

சிந்தைக்கு விருந்தான சிறு கதைகள்.

எழில் மிகுந்த இலக்கியக் கட்டுரைகள்.

அவல நிலையை அகற்றி ஆக்கநிலையையடையவழி.

நாட்டின் முன்னேற்றத்திற்கான நல்லுரைகள்.

★

இவைகளுடன் முழங்குவதுதான் "உரிமை முழக்கம்"

ஆசிரியர்,

நாஞ்சில் P. வீரபத்திரன்.

ஆசிரியரும் வெளியிடுபவருமான P. வீரபத்திரன் அவர்கள் கரந்தை, ஞாயிறு பதிப்பகத்தில் N. கணேசன் அவர்களால் அச்சிடப் பெற்றது. "உரிமை முழக்கம்" அலுவலகம். 29, வாணடையார் காலனி, புஷ்பவநகர், தஞ்சாவூர், தமிழநாடு.